244

# கிருஷ்ணாமிருத
# போதம்

ஸ்ரீமான்

ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

இந்தியா ஐரோப்பா முதலிய தேசங்களில் நடந்த
மகாநாட்டில் ஆங்கிலத்தில் திருவாய்மலர்ந்தருளிய

## 2. ஞான புஷ்கரணி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1933
MADRAS

தி. மு. மாணிக்கம் பிள்ளை அவர்கள், F. T. S.
மொழிபெயர்த்தது.

PUBLISHERS:
**...CAL TAMIL PUBLICATION SOCIETY,**
*Adyar, Madras.*
1933

R21
N33·2
58895

# கிருஷ்ணாமிருத போதம்

ஸ்ரீமான்

ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

இந்தியா ஐரோப்பா முதலிய தேசங்களில் நடந்த

மகாநாட்டில் ஆங்கிலத்தில் திருவாய்மலர்ந்தருளிய

## 2. ஞான புஷ்கரணி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1933
MADRAS

தி. மு. மாணிக்கம் பிள்ளை அவர்கள், F. T. S.

மொழிபெயர்த்தது.

PUBLISHERS :

**THEOSOPHICAL TAMIL PUBLICATION SOCIETY,**

*Adyar, Madras.*

1933

R21
N33.2

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

58895

# பொருளடக்கம்

பக்கம்

1. தானாக யோசித்தல் .... 108
2. உய்த்துணர்தல் .... 118
3. தன்னை வினவுதல் .... 129
4. மெய்ப்பொருளைக் காணல் .... 138
5. பிரிவினை யகற்றல் .... 149
6. கற்கவேண்டிய பாடங்கள் .... 158

# ஞான புஷ்கரணி

## க. தானுக யோசித்தல்

ஆனந்த நாடு என்றால் என்ன ? அஃது எங்கே இருக்கின்றது ? அதை நாம் எப்படி அடையக்கூடும் ? அதனுடைய அருத்தமென்ன ? அதை எந்த விதத்தில் வெல்ல முடியும் ? எவ்வித எண்ணங்களைக் கொண்டு எத்தகைத் தன்மைகளைக் கொண்டு, எம்மாதிரி அடக்கி யாளும் வகையைக் கொண்டு, எவ்வித இடையறாப் பயிற்சியைக் கொண்டு அந்தச் சாசுவத பேரின்பப் பூரணத்தை அடைவோம் ? சாந்தந்தரும் நிழல்களா லடர்ந்து அழகுடன் அமைதிகூடி, தான் வேறு எனும் காமியத்தன்மையை அழிக்கும் சோலைக்குள் எப்படி நுழைவோம் ?

முதலில் நான் உங்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு சமயம் நான் கடின வார்த் தைகளைப் பிரயோகித்த போதிலும் வெகு விநயத் துடன் பேசுகிறேன். உங்களைக் கண்மூடி நடக்கச்செய்ய வாவது, யோசனையில்லாது நீங்கள் கேட்டிருக்கும் படிச் செய்யவாவது எனக்குப் பிரியமில்லை. எனது உள்ளத்தில் உள்ளவாறு உண்மையாய்ப் பேசுகிறேன். அதைச் சீராய்த் தெரிந்து கொள்ளவேண்டுமானால் நீங் களும் அவ்விதமே செவி சாய்த்துக் கேட்கவேண்டும். அது எப்படி இருக்கிறதென்றால் நீங்கள் ஒவ்வொரு வரும் பார்க்கும் ஆகாயத்தையே நான் அதன் முழு

அழகையும் மகிமையையும் காட்டும் விரிவான பலகணி வழியாய்ப் பார்த்துக்கொண்டிருக்க, நீங்கள் அதையே சிறிய சந்து வழியாய் ஒரு பகுதியை மட்டும் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் போலும். ஆதலால் என்னுடைய பலகணி வாயிலுக்கு வந்து பார்க்கும்படி உங்களைச் சிநேகித வாஞ்சையுடன் மனதார அழைக்கின்றேன். சிறிய சந்து வழியாய்ப் பார்ப்பதைவிட்டுப் பெரிய வாயில் வழியாய் மெத்த அலங்காரமான காட்சியைப் பார்க்கும்படி உங்களைக் கேட்கிறேன். இக்கருத்துடன் நான் பேசப்போகிறேன்.

நான் சொல்வதை பக்தி பரவசத்தோடாவது, அபிமான பாவனையோடாவது, வார்த்தைகளால் மயங்கியாவது போகாதபடி உங்கள் மனதைக் கொண்டு கவனிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். கூட்ட மயக்கத்தில் வசப்பட்டுப் போகாமலும் கூட்டத்திலிருப்போர் போகும் போக்கின்படி நடவாமலும், எதன்பேரிலும் சாராமல் மனதைப் பிரத்தியேகமாய்ப் பிரயோகித்து விஷயத்தை நீங்களாகவே யோசிக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். பெருங்கூட்டம் கூடியிருக்குமிடத்தில் எல்லோரும் ஒரேவிதமாய் நினைத்து வருவதைக் காண்கிறோம். கூடியிருக்கும் ஜனங்களுடைய உள்ளக் கிளர்ச்சியைத் தட்டி எழுப்பிவிட்டால் அவர்கள் அச்சமயத்தில் சபாநாயகர் தட்டிக் கொடுக்கும் போக்கின்படி நினைக்கத் தொடங்குகிறார்கள். நீங்கள் அப்படிச் செய்வீர்களானால் உங்களை நீங்களே கெடுத்துக்கொண்டவ ராவீர்கள்; பெருத்த அநீதத்தைச் செய்துகொண்டவ ராவீர்கள். கூட்டம் போகும் போக்

கில் அடித்துப்போக உங்களை விடுவீர்களானுல் மிக எளிதான கருத்தைக்கூடத் தெரிந்துகொள்ளத் தவறி விடுவீர்கள்.

மனமானது உண்மையில் ஆளும் அரசன்; மெய் யான துணைவன்; நிச்சயமான வழிகாட்டி. ஆனுல் அம் மனதைத் தவருன வழியில் உபயோகித்தால் அதுவே நம்மை அழித்துவிடும் பகையாளி. வகையுடன் உப யோகிக்கும்போது மனமானது நமக்குக் கைகொடுத்து வழிநடத்தும் சக்தியாக இருக்கும். அறிவில் நாம் மேதாவிகளாக இல்லாவிட்டாலும் சாதாரண விவேக மும், பொதுவாய் அறியும் அறிவும் கூடக் குறையா யுள்ள விஷயங்களைச் சரிப்படுத்திக்கொள்ளும் திறமை யும் நமக்குண்டு. ஆகவே மனதை இவ்வகையில் உப யோகிக்கும்போது அது பலத்த துணையாகவும் கட்டி யாள்வதற்கும், புதியமாதிரி யுண்டாக்குவதற்கும் பெருத்த சாமர்த்தியந் தரும் சக்தியாகவு மிருக்கும். வேகமாயோடுங் குதிரைகளை அடக்கி யோட்டும் கடிவாளத்தைப்போல் இது வழிநடத்தவும் அடக்கி யாளவும் பலம் கொடுக்கும். இக்காரணத்தைக் கொண்டு நான் சொல்லப்போகிற விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமானுல் நீங்கள் வெறும் பக்தி மயக்கத்தோ டிராமல் மனதை உபயோகிக்க வேண்டும்.

சரியான ஆவலைக் கொடுப்பதும் மனதே. நம் மில் அநேகருக்குப் பேரவா என்பதில்லை. ஏனெனில் அவாவுட னிருப்பது பிழை யென்றும், வைதீகமல்ல வென்றும் நினைக்கிருேம். அதைச் சரியான வழியில் உபயோகப் படுத்துவோமாகில் பிழையில்லை. நீங்கள்

கோரியிருக்கும் இலட்சியத்திற்குச் சரியான வழியில் உங்களை நடத்திக்கொண்டு போகும்படி உங்கள் மனதை உபயோகப் படுத்துவீராகில் அப்போது அவாவைப் பெற்றிருப்பது தகுதியானதே. சரியான அவாவை நாமெல்லோரும் விருத்தி செய்யவேண்டு மென்று யான் சொல்லுவதிலுள்ள கருத்து இதுவே. நல்ல வகையிலுள்ள அவா பலந்தரும்; ஊக்கங் கொடுக்கும்; முன்னேற்றத்திற்கு வேண்டிய முக்கிய முயற்சியைத் தொடுக்கச் செய்யும். ஆனால் சுயநல நோக்கத்துடன் அதிகாரத்தின்மேல் நாட்டுவதும், மேம்பட்டு விளங்க வேண்டுமென்று விருப்பந் தருவதுமான வாஞ்சை அற்பமானது; பிசகு. ஆனால் உம்மை நிஷ்காமியார்த்த மாய் வேலை செய்விப்பதும், பிறருக்கு உதவி செய்யக் கூடிய பலத்தைத் தருவதும், எதையும் பொறுத்துக் கொள்ளும் உறுதியை அளிப்பதுமான வாஞ்சையைப் பெறல் தகுந்ததே. இத்தகைய அவா மானிட முன்னேற்றத்திற்கு வேண்டியதே. நம்மில் ஒவ்வொருவருக்குள்ளிருக்கும் பெருத்த வன்மை இது; புதிய சக்தியை உண்டாக்குவது இது. இப்படி சுயநலத்தன்மையில்லாத வாஞ்சை பாரமார்த்திக மானது.

தெரிந்து கொள்வதாலே உங்களுக்குத் தைரியம் வருகின்றது. அதிதீவிர ஊக்கம் உண்டாகிறது. வெறும் உணர்ச்சியோடு நிற்காமல் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமானது. உங்களுடைய அறிவை ஆரம்பத்திலிருந்தே, ஏணியின் முதற்படியிலிருந்தே, நீங்கள் ஏறிப்போகும் மலையின் அடிவாரத்திலிருந்தே உபயோகிக்க வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் பேரின்ப இராஜ்ஜியத்தை அடையவேண்டும்; அது நம்மில் ஒரு பாகமாயிருக்க வேண்டும்; அதில் நாம் சாசுவதமாகக் குடியிருக்க வேண்டும் என்பதே எனது வாஞ்சை. அந்தப் பேரின்ப இராஜ்ஜியம் ஏதோ ஓர் குறித்த ஒரு தேசத்திலோ, கடலோரங்களிலோ, ஜன சஞ்சார மில்லாத ஒதுக்கு இடத்திலோ, அசைவற்று, ஓய்ந்திருக்கும் நேர்த்தியான மாலை வேளையிலோ காணக் கூடியதல்ல. நமது முன்னோர்கள் திரவியந் தேடப்போனது போல் நீங்களும் இந்தப் பேரின்பத்தை நாடிச் செல்லல் வேண்டும். நம்மில் ஒவ்வொருவருக்குள்ளும் மறைந்திருக்கும் இந்த இன்பச் சோலையை, இந்தப் பேரின்ப இராஜ்ஜியத்தைக் கண்டுபிடிக்க உங்களது மனதையும் இதயத்தையும் செலுத்தவேண்டும்.

இஃது எங்கேயோ வெகு தூரத்திலிருக்கும் இராஜ்ஜியமல்ல; அல்லது பூமியின் கோடி வரைக்கும் யாத்திரை போகவேண்டிய இடமுமல்ல. சுவர்க்கக் கதவுகள் அனைத்தையும், பரவசச் சோலைகள் எல்லாவற்றையும் திறக்கும் திறவு கோலை நீங்கள் கண்டு பிடித்தாகவேண்டும். அஃது யாதெனில் உங்களிடத்தில் உள்ளுக்குள்ளே இருக்கும் நாதத்தின் வாக்கே அத்திறவு கோலாகும். நீங்கள் உய்த்துணர்ந்தறியும் அறிவே அத்திறவு கோல். அத்திறவுகோலைக் கைக்கொண்டால் அந்தச் சோலைக்குள் நுழையலாம்; அதில் சாசுவதமாய் வாழலாம். அந்நாதத்தின் வாக்கு உங்களிடத்தில் தெளிவாகப் பக்குவமடைந்து சீராகப் பழகி வந்திருக்குமே யாகில், அதாவது அநேக துயரங்க

ளாலும் பரவசங்களாலும் அநேக சுகதுக்க அனுபவங்க ளாலும் பிறந்துள்ள அதைநீங்கள் போஷித்துப்பூரணப் பக்குவத்திற்குக்கொண்டுவந்திருப்பீர்களாயின், அதன் சொற்படி கீழ்ப்படிந்து நடக்கக்கூடிய கடின நாயகனுக அவ்வாக்கு உங்களுக்கு அமைந்து இருக்குமாயின் அப்போது பேரின்ப இராஜ்ஜியம் உங்கள் ஒவ்வொரு வருக்கும் கிட்டும்.

ஆற்று நீருனது நடனமாடிக் கொண்டு கடலுக்குப் போகும்போது எதிர்ப்படும் ஒவ்வொரு பாறையும் அதையொரு கீதம் பாடச் செய்யும், ஒவ்வொரு கூழாங் கல்லும் புதிய பாடலை முழக்கும், கரைவளைந்து போதல் அதற்கு நூதன இன்பமுண்டாக்கும். நீர் அருவி பிரவாகமாய் விழும்போது முழக்கமிடும். ஆருனது கடலுக்கு இவ்வித ஆனந்தப் பரவசமாகிப் போய்க்கொண்டிருந்த போதிலும் அதற்கு ஒரே ஒரு நோக்கம், ஒரே ஒரு கருத்துதான் உண்டு. வளைந்து வளைந்துபோய்க்கோண்டிருந்த போதிலும் தான் எனும் அகங்கார அஞ்ஞான உணர்வும், ஏகாந்தியாய் அனுதியாய் வேரு யிருக்கின்ரேம் எனும் நினைவும் இல்லாதிருக்குஞ் சமுத்திரத்தில் கலக்கக் குறுக்கு வழியை அது ஆவ லோடு எப்போதும் தேடிக்கொண்டிருக்கும். ஆறு கட லில் சேர்கிறவரையில், அது தனக்குள்ள பரவசங்க ளோடும், தன் கஷ்டங்களோடும் கீதங்களோடும் தனி ஆருக விருக்கின்றது. அந்த நதியைப்போல நீங்களு மிருக்கவேண்டும்.

பெருநதியின் முழக்கம், கவரத்தக்கதாயும் நேர்த்தி யாயும் மகிழத்தக்கதாயு மிருப்பது போல் "நீ, நான்"

அற்ற இடமாகிய மோட்சம், சுவர்க்கம், நிருவாணம் என்று சொல்லப்பட்ட அந்த அகண்டாகாரக் கடலில் கலக்கக் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவனுடைய நாத வாக்கும் இருக்கும். கடல் நோக்கிப் போகும்போது உங்களுக்கு அநேகவித அனுபவங்கள் கிடைத்தபோதி லும் உங்களுக்கு அந்நதியைப்போல அவ்வகண்ட சமுத்திரத்தைச் சேர, ஒரே எண்ணம், ஒரே கருத்து, ஒரே திடமிருக்கவேண்டும்.

ஆதலால் நாமொவ்வொருவரும் தேடவேண் டும்; வாழ்வூடே நடிக்கவேண்டும்; பெருத்த பக்தி பர வசங்கள், பெருங்கஷ்டங்கள், வருத்தங்கள், சுகங்கள் இவையெல்லாம் ஒவ்வொருவருக்கு மிருக்கவேண்டும். இவைகள் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாயும், பல மாயு மிருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு சீக்கி ரத்தில் ஜீவித வாழ்வோடு ஒற்றுமைப் பட்டு நிரு வாண நிலையில் வந்து சேருவோம்.

எல்லாவித அறிவிற்கும், ஞானத்திற்கும் ஊற்று யிருக்கும் ஆனந்தத் தீர்த்தத்தை அருந்தியவுடனே உலகிலுள்ள மற்றெதுவும் உங்களுக்குத் திருப்தியைத் தாராது. கஷ்டப்பட்டுக்கொண்டும், ஜீவித வாழ்வூடே வாழ்ந்துகொண்டும், நடந்துகொண்டு மிருப்பவர் ஒவ் வொருவருக்கும் அந்தப் பேரின்பம் இருப்பி லிருக் கின்றது. ஆனல் அப்பேரின்பத்தைத் தேடும் ஒவ் வொருவரும் தாமாகவே அந்த நாதவாக்கின் ஆட்சி யையும் அதிகாரத்தையும் வல்லமையையும் கண்டு கொள்ளவேண்டும். பிறகு அந்த வாக்கிற்குக் கீழ்ப் படிந்து நடக்கவேண்டும்.

அநேக வருஷங்களாக அந்தப் பேரின்பத்தை நான் தேடித் திரிந்தேன்; அநேக தேசங்களில் போய் அலைந்தேன்; அநேக புஸ்தகங்களை வாசித்தேன். ஒரு கால் கொஞ்சம் கஷ்டமும் பட்டேன். என்றாலும் பூலோகத்தி லில்லாத அந்தப் பேரின்பக் காட்சியைக் காண சதா ஏங்கினேன். சில மாதங்களுக்கு முன் அதைக் கண்டுகொண்டேன். அந்நாள்முதல் அந்த இராஜ்ஜியத்தில் வசிக்கின்றேன். அஃது எனக்கு நிச்சயமா யிருக்கின்றது.

இக் காரணத்தைக் கொண்டு அந்தச் சுகந்தமான திவ்ய காற்றை, அப்பூரண நறுமணத்தை நீங்கள் சுவாசிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். என்னோடு வாருங்கள்; அச்சோலை நிழல்களில் நீங்கள் உல்லாசமாய் விளையாடி ஆனந்திக்கும்படி செய்வேன். அப்புறம் நீங்கள் எவ்விதமாயிருந்தபோதிலுஞ் சரி, சந்நியாசியா யிருந்தாலுஞ் சரி, அல்லது மெத்த சம்பத்துடன் அரண்மனையில் வசித்திருந்த போதிலும் சரி பாதக மில்லை. பிறகு நீங்கள் ஒவ்வொன்றிட மிருந்தும் பற்றில்லாது ஒதுங்கி யிருப்பீர்கள் என்றாலும் எல்லா விஷயங்களையுங் கருத்துடன் கவனிப்பீர்கள்.

இதற்காகவே நீங்கள் எதையும் மனதாரத் தெரிந்து கொள்ள வேண்டியது முக்கியமானது. இப் படிப்பட்ட விஷயங்களைப்பற்றிக் கண்ணீர் விடுவது சுலபமே. அழுவதும் எளிதே. பக்தி பரவசத்தோடிருப் பதும் மிகச் சுலபம். ஆனால் நீங்கள் மனதில் தெரிந்து கொண்டபோது நீங்களாகவே வழி நடக்க உங்களுக்குப் பலம் வரும். நீங்கள்தான் அதீதப் பரம்பொருள்;

நீங்களே சன்மார்க்கம். அச்சோலையிலுள்ள ஒவ்வொரு மரத்திலும் நீங்களிருக்கின்றீர்கள். ஒவ்வொரு செடியிலும் ஒவ்வொரு ஜந்துவிலுமிருப்பது நீங்களே.

நீங்கள் தெரிந்து கொள்வீர்களானால் உங்களுக்குள்ளிருக்கும் அந்த நாத வாக்கின்படியே நடக்க வேண்டும். நீங்கள் அக்காட்சியைப் பார்க்க வேண்டுமானால் கண்டிதமாய் முற்றும் அவ்வாக்கின் சொற்படி வாழவேண்டும். ஆனாலும், அவ்வாக்கானது அநேக விதகஷ்டங்களாலும் சுக துக்கங்களாலும் அனுபவங்களாலும் தூய்மைபெற்று மேன்மை யடைந்த உண்மையான நாத வாக்காக வந்திருக்கிறதா என்பதை ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும். அவ்வாக்கிற்கு நீங்கள் கீழ்ப்படியாமலிருக்க முடியா வண்ணம் அதன் செல்வாக்கு உங்கள் பேரில் அதிகாரப் பொறுப்பாக இருக்கவேண்டும். அப்போது நீங்கள் சோலைக்குள் செல்லுவீர்கள் ; பேரின்ப இராஜ்ஜியத்தைச் சேருவீர்கள். அதனுடைய ஆனந்தக் களிப்பை உருசி பார்த்தவுடன், அந்தரங்கக் காட்சியைத் தரிசித்த பிறகு பூலோகத்திலுள்ள எந்த வஸ்துவினாலும் நீங்கள் கட்டுண்டிருக்க மாட்டீர்கள். நீங்கள் சாசுவதமான பேரின்பத்தின் ஊற்றிற்கு அருகிலிருப்பீர்கள்.

என்னுடைய பேரின்பத்தை நீங்கள் எல்லோரும் தெரிந்து கொள்ளும்படி செய்வேன். அச்சோலைக்குள் உங்களை இட்டுக்கொண்டு போவேன். அக்காட்சியைக் காண்பிப்பேன். அதனுடைய மகிமையையும் பூரணத்தையும் பார்க்கும்படி செய்வேன். நீங்கள் அச்சோலைக்குள் உலாவின பிறகு மற்றவர்களையும் அதில்

கொண்டுவர சாமர்த்தியமும் அதிகாரமும் உங்களுக்கு உண்டாகும்.

அப்போது, ஏற்றுக்கொள்ள மாத்திர மல்லாது அளிக்குஞ் சக்தியையும் நீங்கள் பெற்றிருப்பீர்கள்.

## உ. உய்த்துணர்தல்

அறிவுடையவரும், அறிவைத் தேடுபவரும் தமது அக்கம் பக்கங்களி லுள்ளவைகளை நோக்கிச் சிந்திக்கவேண்டும். எல்லாப் பொருள்களும், உயிருள்ளவை யானுலுஞ் சரி, உயிரற்றவை யானுலுஞ் சரி, சொற்பகால மிருப்பனவே; எதுவும் நிலைத்திருப்பதில்லையே. ஜனன மென்றும் மரணமென்றும் நடைபெறுகின்றது; அவசரத்தோடு இடிபடல் நிகழுகின்றது; இன்பமும் துன்பமும் சிறிது காலத்தியதாயிருக்கின்றன. ஏக்கங்கள், திருப்தியடையாத ஆசைகள், ஒருபோதும் திருப்திசெய்ய முடியாத விருப்பங்கள் குடிகொண்டிருக்கின்றன. சூன்யம் என்பது பெருத்த சமுத்திரமாயிருக்கின்றது. ஒதுக்கிடங்களில் பூத்திருக்கும் மிருதுவான புஷ்பத்தைப் போல் பிரேமையும் அன்பும் வாடுகின்றன. ஜனனத்தில் சந்தோஷமும் மரணத்தில் துக்கமும் வருகின்றன. திருநாள் என்பது பறந்து செல்லும் மேகம் போல ஓடுகின்றது. உயிருள்ளனவும், உயிரற்றனவுமான பொருள்களெல்லாம் க்ஷீணித்துக் கொண்டே அழிவிற்குப் போகின்றன. எல்லோரும் பிணமாகி இடுகாட்டிற்குப் போகிறார்கள்; பிறகு மண்ணாகி விடுகிறார்கள்.

எங்கெங்கே பார்த்தாலும் இவ்விதமான ஒழுங்கின்மையும், சொல்லமுடியா அலைச்சலுங்கூடிய திருப்தியடையாத ஏதோ வொன்று குடிகொண்டிருக்கின்றது. விஷயங்கள் ஏன் அப்படியிருக்கின்றனவென்று விசாரமனதுடையவன் "நீடித்துள்ளது யாதேனும் உண்டா? நிலைத்திருப்பது யாதாகிலு மிருக்கின்றதா? அழியாமலிருப்பது யாதேனுமுளதா? இளைப்பாறுமிடம் ஏதாவது இருக்கின்றதா?" வென்று கேட்கவேண்டும்; விசாரிக்கவேண்டும்; கண்டுபிடிக்கவேண்டும்.

ஆசைகளிலிருந்தும், திருப்தியடையா இச்சைகளினின்றும் விடுபட்டிருக்கவும், மனது அமைதியுடன் சாந்தமாய் நிலைத்திருக்கவும் கூடிய ஸ்தலம் யாதுமில்லையா? மாறுதலில்லாமல், அழிவில்லாமல், வாடிப்போகாமல் சந்ததமாயுள்ள பொருள் யாதுமில்லையா? என்று அறிவுடனிருக்கும் மனது ஆலோசிக்கின்றது; சுற்று முற்றும் நிலையில்லா விஷயங்களைப் பார்த்து நீடித்திருப்பது யாதொன்று மில்லையா? சாசுவதனமானது யாதுமில்லையா? என்று கேட்கின்றது.

அவ்வித சந்ததப் பொருளைக் காணாதவர்கள் இதற்குப் பதிற் சொல்லமுடியாது. கண்டவர்களோ விளக்கமில்லாத வகையிற்றான் சொல்ல முடியும். ஏனெனில் விகாச முறையில் அவனவன் அடைந்திருக்கும் வளர்ச்சியை யொட்டியும், தத்தமது எண்ணம், உணர்ச்சி இவைகளிருக்கும் தரத்திற்குத் தக்கபடியும் கோரியதைக் காணவேண்டி யிருக்கிறது. எல்லோருக்கும் அதே காட்சி கிடைக்கும்; எல்லோரும் அதே அழகைப் பார்ப்போம் என்றாலும் பார்த்ததைச்

சொல்லும் வார்த்தைகள் வெவ்வேறு பொருளைக் கொடுத்துவிடும்.

அறிவு வயதில் மூத்தவர்கள் - அதாவது தேக வயதல்ல ; மற்று அநேகவித துக்கங்களாலும் வருத்தங்களாலும் சுகங்களாலும் பக்தி பரவசங்களாலும் அடிபட்டு அனுபவங்களில் தேர்ந்தவர்கள் - அந்தக் காட்சியைப் பார்த்த பிறகு, நிலை பேறுனபொருள் ஒன்று இருக்கிறதென்று சந்தேகமின்றிச் சொல்லக் கூடும்.

அப்படியானால் அந்தக் காட்சி யென்பது யாது ? அதுதான் மெய்ப்பொருள் ; நிலைத்துள்ளது ; நீடித்துள்ளது. அதற்கு ஆதியுமில்லை ; அந்தமுமில்லை ; அது மாறுதது ; அழிவற்றது. அஃது எங்கே இருக்கிறது அதை எங்கே காணுவோம் என்று கேட்பீரானால், அதை நீங்கள் அந்த ஆனந்த நாட்டில் காணலாம் என்று யான் சொல்லுகிறேன்.

நீங்களதைக் காண வேண்டுமானால் ஞானகாரமாயும் மெய்ப்பொருளாயு மிருக்கும் அந்தத் தேவலோக புஷ்கரணியைத் தேட உங்கள் மனதையும் இதயத்தையும் செலுத்த வேண்டும். ஏனெனில் அவ்விடத்தில், அந்த நாட்டில், அந்த கர்ப்பக் கிரகத்தில் நாம் கற்க வேண்டியிருக்கின்றது; அநுபவம் பெறவேண்டியிருக்கிறது ; மனோ வல்லமையாலும், உயர்வுற்ற தாபக் கிளர்ச்சியாலும் வளர வேண்டியிருக்கிறது. மெய்ப்பொருள்குடிகொண்டு சாசுவதமாயுள்ள அவதார சொரூபத்தை அங்கே காணவேண்டி யிருக்கிறது. உலகிலிருக்கும் உபாயமான வெறும் மகிமைகளாலும்,

சிநேகிதர்களுடைய முகஸ்துதிகளாலும் திருப்தி யடையாதிருக்கும் அநேகரைப்போல் நீங்கள் தேடவேண்டும். ஆகாயத்தின் சுத்த வெளியைப் பார்க்க விரும்பினால் இருப்பிடத்தில் காடுபோல் மூடியிருருக்கும் புதர்களைஅப்புறம் ஒதுக்கித்தள்ளவேண்டும். அநித்திய விஷயங்கள் எனும் காட்டிலிருந்து வெளியே போவதற்கு வழியைக்காட்டும் நட்சத்திரங்களைப்பார்க்க வருமுன் வாழ்க்கையில் பட்டுப்போய் மறைக்கும் கிளைகளை வெட்டி எறியவேண்டும்.

இவ்விதமாக நீங்கள் தொடங்கவேண்டும். யானும் அவ்விதமாகத்தான் ஆரம்பித்தேன். எனது சந்தத்தைக் கண்டேன். விஷயங்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையா யிருக்கும் மூலத்தை - பரிபூரணத்தை, அழகை, ஆனந்தக் களிப்பை - கண்டேன்; அமிர்தத்தை உருசி பார்த்தேன். யான் பார்த்ததை எனது கருத்தின்படிதான் விவரிக்க முடியும். அஃது உங்களுக்கு அருத்தமாகாததுபோல் காணும் வார்த்தைகளைக் கொண்டுதான் சொல்ல முடியும். என்றாலும் அதைப்பற்றி நீங்கள் ஏக்கங் கொண்டிருந்தபடியால் அது உங்களருகில் வந்தாயிற்று. அதை நீங்களாகவே பார்த்தவுடன், அஃது உங்கள் உயிருக் காதாரமான சுவாசம் போலாய் விட்டவுடன், நீங்கள் அறிந்து கொள்வீர்கள். அப்போது அமிர்தத்தை உட்கொண்டதாகவும், நித்தியமாய் நீடித்து மாறாததாயுள்ளதைக் கண்டதாகவும் உங்களுக்குத் தெரியும்.

உங்களைத் திருப்தி செய்யக்கூடியது அமிர்தத்தைத் தவிர, அதாவது மெய்ப்பொருளைக் காண்பதை

விட, வேறொன்றும் உலகிலில்லை. ஆனால் மெய்ப்பொருள் வீற்றிருக்கும் அந்த ஞான புஷ்கரணியை, ஆனந்த நாட்டைத் தேடுபவன் சுயகாமியத்தை அழிக்கும் விதத்தை முதன் முதல் கற்கவேண்டும். உண்மையான சிநேகித வாஞ்சையின் பெருமையை, அதாவது எல்லா ஜீவராசிகளுடனும் ஒன்றிய உணர்ச்சி பெறும் போதும், மற்றவர்களை விட்டுத் தான் வேறல்ல என்றிருக்கும் போதும், உனது சுற்று முற்று மிருக்கும் அநித்தியப் பொருள்களிடையில் சந்ததமா யிருப்பதைக் காணும் போதும், ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு மனிதனும் தவழ்ந்தோடும் மேகம் ஒவ்வொன்றும் இன்னும் பூமியிலுள்ளவை யெல்லாம் புதிய கருத்தைத் தனி கீதத்தை, வேறுவித சுகத்தை, வேறுவித ஆனந்தத்ந்தைக் கொடுக்கும்போதும் உள்ள பிரேமையை உணர்ந்தறிந்து மதிக்கக் கற்கவேண்டும். அப்போது நீங்கள் ஆனந்த நாட்டில் புகமுடியும். அங்குச் சில்லென்று வீசும் அநேக காற்றுக ளிருக்கின்றன.

ஏனெனில் சுயகாமியமும் மெய்ப்பொருளும் ஒன்றாய்க் கூடியிருக்க முடியாது. சுயகாமியத்தின் வழியோ துக்கத்திற்கும் வருத்தத்திற்கும் வாழ்வென்று கூறி நித்தியமென்றும் நீடித்ததென்றும் தவறாக எண்ணும் பறந்தோடும் சுகத்திற்கும் கொண்டு போய்விடும். மெய்ப்பொருளோ ஆனந்த நாட்டில் கொண்டு போய்விடும். ஏனெனில் அங்குச் சுயகாமியம் மறந்து போய் விடுகின்றது. செயல் கொண்டோ, செயலற்றோ இருப்பனவும் தாவர ஜங்கமப் பொருளாயிருக்கும் உலகிலுள்ள எல்லாவற்றினோடும் நீவிர் ஒரு பாகம்

என்று உங்களை அங்கு உணரச் செய்யும்; மனதில் நினைக்கச் செய்யும். அப்படிப்பட்ட மனதாயும் தாப உணர்வாயும் இருக்கும் ஜீவிதத்தின் சம்பூரண ஒற்றுமை அங்கிருக்கின்றது.

ஆனால், அந்த ஆனந்த நாட்டிற்குப் போகப் பிரியப்படுகிறவன், பெருந்தன்மை யுடையவனாக வேண்டுமானால் சுயகாமியத்தைப் பலி கொடுக்கும் விதத்தைக் கற்கவேண்டும். அஃது எவ்வளவு கஷ்டமானாலுஞ் சரி, அது தற்சமயத்தில் முடியாததானாலுஞ் சரி, எவ்வளவு களைக்கத்தக்கதானாலுஞ் சரி, எவ்வளவு வருத்தமானாலுஞ் சரி அதைப் பலிகொடுத்தாக வேண்டும். நீடித்திருக்கும் பேரானந்தத்தை, பெரும் பரவசத்தை, அதீத மகிமையைப் பெறுவதற்காகவும் பிறருக்கு அளிப்பதற்காகவும் அதைப் பலி கொடுக்கத்தான் வேண்டும்.

இஃது எனது மனோவாஞ்சை, எனது ஆனந்தம் அந்த இராஜ்ஜியத்தைப் பார்த்திருப்பது எனது களிப்பு. ஆகவே அந்நறுமணக்காற்றைச் சுவாசிக்க நாம் எல்லோரும் சேர்ந்துபோவோம்; சேர்ந்து பார்ப்போம்; சேர்ந்து சோதிப்போம்.

நீங்கள் எனது கண்கள் வழியாய்ப் பார்ப்பதற்கு முன், எனது மனதின் மூலமாய் நினைப்பதற்கு முன், எனது இதய வழியாய் உணருவதற்கு முன் உங்களிடத்தில் வைத்திருக்கும் பாரபக்ஷங்களை யெல்லாம் உடைத்தெறியஉங்களுக்குப்பலமும்திறமையுமிருக்கவேண்டும். ஏனெனில் நாம் காண்பது விவேகத்தின் ரசமாயும், யோசிக்கு மறிவின் சத்தாயும், தாபங்களின் தைல

மாயும், அன்பின் அமுதமாயு மிருக்கவேண்டும். துர் அபிப்பிராயங் கொண்டவர்களும், பந்தங்களால் பிடி பட்டவரும் அதன் முழு அழகையும் பெருமையையும் மகிமையையும் பார்க்கமுடியாது. துரபிப்பிராய மென்பது சூரிய வெளிச்சத்தை மங்கவைக்கும் புகைவர்ணக் கண்ணடியைப் போல் பார்வையை முறுக்கி விடுகிறது.

இக்காரணத்தைக் கொண்டு அதைப் பார்க்கக் கூடிய கிரமத்தோடு பார்க்க விரும்பும் நீங்கள், இருந்தது இருந்தாற்போல் பார்க்க விரும்பும் நீங்கள், பயமின்றி, களிப்புடனும் அடக்கியாளும் திறமையுடனும் தடையில்லாது வரவேண்டும். ஆனல் அந்தப் பொறுப்பிற்கு வர உங்களுக்குள்ளே யிருக்கும் நாதத்தின் வாக்கிற்கு நீங்கள் கீழ்ப்படிந்து வந்திருக்கவேண்டும். பாரபக்ஷச் சுவர்களையும், உங்களை இறுக்கிப் பிடிக்கும் இடுக்குகளையும், உடைத்தெறிய தற்சமயம் பரிசோதிப்போம்; இதயத்தால் மாத்திரமல்ல நமது மனதோடும் சோதிப்போம்.

சிற்பி ஒருவனுடைய வேலைத் திறமையைப் பூரணமாய்க் காட்டும் கற்சிலையையாவது, மாலைப் பொழுதில் மலைக்கு மேல் வானத்திலுள்ள விநோத வர்ணக் காட்சியையாவது, வேகமாய்ப் பறக்கும் பறவையின் பளபளப்பையாவது, வயலிலிருக்கும் மனோரஞ்சித புஷ்பத்தையாவது, தனியாயிருக்கும் பிரமாண்ட விருட்சத்தையாவது இப்படிப்பட்ட பூலோக அற்புதத்தைப் பார்த்து அக்காட்சியை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டும். பிறகு தாப விகாரங்களால் ஊசலாடவைக்கும் மனச்சோர்வாவது, பெருத்த பரவசமாவது வரும்.

14 JUL 1933

போது அவைகளை ஞாபகப்படுத்திக் கொள்வாயானால் அச்சமயம் அக்காட்சி உனக்கு ஆனந்தத்தைக் கொடுத்து அதனுடைய அழகைக் கொண்டும், திவ்யத்தைக் கொண்டும், சுகத்தைக் கொண்டும் உனது அற்பத் தொந்திரவுகளைத் தீர்க்குமானால், அப்போது, நாம் ஒவ்வொருவரும் எதற்காக ஏக்கங்கொண் டிருக்கிறோமோ, எதை விசாரித்துக்கொண் டிருக்கிறோமோ, அதைக் காண மனதும் இதயமும் ஒன்றுக்கொன்று உடன்பட்டு ஒத்திருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது.

இவ்விதந்தான் சந்ததமாயுள்ள மெய்ப்பொருளின் காட்சியும். ஆகவே, நீங்கள் அதனுடன் வாழவேண்டும். உலக விஷயங்களின் மேல் கவனம் வையாதிருக்கும் போதெல்லாம், அற்ப விஷயங்களில் பிரியம் வையாத நேரமெல்லாம், ஒவ்வொரு நிமிஷமும் அந்த அழகைக் கருத்திலிருத்தி, அதை யொரு விலையுயர்ந்த இரத்தினமாக அணைத்து வைத்திருக்க வேண்டும். சாதாரண பூலோக சுந்தரத்தின் காட்சியை நீங்கள் கண்டிருப்பீர்களானால் சஞ்சலப்படுஞ் சமயத்தில் அது அநேகமாய் நினைவுக்குவரும். அற்பமனதுடையவரும், ஈன இதயமுடையவரும் அதனுடைய அழகைச் சீக்கிரம் மறக்கின்றவர்கள். ஆதலால் நீடித்திருக்க வேண்டிய அந்த அழகையும் நிலைத்திருக்கவேண்டிய அந்த ஆனந்தத்தையும் மெல்ல மெல்ல மறந்து விடுகிறார்கள்.

நாம் அறிவுடையோர்களானால், பாரபக்ஷமில்லாத இதயமும் சுத்த மனமுமுடையவரானால் அப்போது பூலோகக் காட்சியின் அழகு எப்போதும் மனதிலிருக்கும். நீங்கள் அதை வேண்டியபோது மனோ

ராஜ்ஜியஞ் செய்து கொண்டு அதில் வாழலாம்; வெளி யுலகை மறக்கலாம். பரவசமாக்கும் அந்தக் காற்றை எப்போதும் சுவாசிக்கலாம். இந்தப்படி நீங்கள் ஆனந்த நாட்டை, ரோஜா மலர்களால் நிறைந்த இந்தத் தோட் டத்தை, பரவச ஆனந்த அமிர்தமாயிருக்கும் இந்த இடத்தை சுத்த மனதுடன், சுத்த இதயத்துடன் பார்த்துப் பற்றிப் பிடித்தவுடன் நீங்கள் எப்போதும் அதில் வாழக்கூடும். அப்புறம் அந்த நித்தியத்திலி ருந்து அநித்தியத்திற்குப்போய்த் திரிந்து கொண்டிருக் கலாம். அப்படிக்கின்றி நம்மில் அநேகர் அநித்தியத் தில் குடிகொண்டு எப்போதோ ஒரு சமயம் நித்தியத் தில் உலாவப் போகின்றார்கள்.

அற்ப விஷயங்களையே நாம் எப்போதும் நித்திய மென்று மதிக்கின்றோம். இக்காரணத்தால் பெருமை வாய்ந்த அந்த மகிமைபெற்ற காட்சி நமக்கு அபூருபமா மாயிருக்கின்றது. ஏனெனில் நாம் அற்ப விஷயங்களால் சூழப்பட்டு அதற்கு அடிமைப்பட்டிருக்கிறோம். இக் காரணத்திற்காக அமைதியா யில்லாத - சாந்தமில்லாத மனமும், எப்போதும் துடிதுடித்துக் கொண்டிருக்கும் இதயமும், ஒரு தரம் பார்த்த அப்படிப்பட்ட காட்சியை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது மிகக்கஷ்டம். இவ்விதக் காட்சியை நாமெல்லோரும் பார்த்திருக் கிறோம், பார்ப்பது பிரமாதமல்ல.

சூரிய அஸ்தமனத்தின் அழகையும், விருட்சத் தின் அலங்காரத்தையும், சலனமற்ற ஆகாயத்தில் பறக் கும் பட்சியையும் நாம் ஒவ்வொருவரும் பார்த்திருக் கிறோம். இவ்வகை அநித்தியப் பொருள்கள் மூலமாகப்

பேரின்பத்தைப் பார்ப்பீர்களானால், அவைகளிடையில் அதீதமாயுள்ள மெய்ப்பொருளைக் காண்பீர்களானால் அதுதான் நித்தியமான பொருள். ஆனால் அதைப் பார்க்க உங்களுக்குக் கண்களிருக்கவேண்டும்; எப்படிப் பட்ட கண்கள் என்றாலோ, அழகான காட்சிகளைப் பார்க்க வெகு நாள் பழக்கப்பட்ட கண்கள்; கஷ்டங் கள் எவ்வாறு யிருந்தபோதிலும், வருத்தங்கள், துக்கங் கள் என்ன வந்தபோதிலும் நெடுங்காலமாய்த் தேடின கண்கள்; பார்த்ததை ஞாபகத்தில் திறமையுடன் வைக்குங் கண்கள் இருக்கவேண்டும்.

மெய்ப்பொருளிருக்கும் அந்தக் கர்ப்பக் கிரகத்தில் நீங்கள் நுழைந்த பிறகு அதை இழக்கமாட்டீர்கள். ஏனெனில் நீங்கள் அந்தச் சாசுவதத்தின் பகுதியா யிருப்பீர்கள். அப்புறம் உலகிலுள்ள மகிமை, சொந்த சிநேகிதர்கள், அற்ப பிரேமை முதலிய பற்றுகள் யாவும் உங்களுக்கு முக்கியமெனத் தோன்றா. ஏனெனின் நீங்கள் சாசுவதத்தைச் சார்ந்தவர்கள்; ஞானகாரமான தேவ தீர்த்தத்தை உண்டவர்கள். அங்கிருந்து எப் போதும் வெளியே போய் உலகிலுள்ள நிலையில்லா விஷயங்களைப் பார்க்கலாம்; மற்றவர்களுக்குச் சுகத் தைக் கொடுக்க முடியும்; அவர்களை இரக்கத்தோடு பார்க்கமுடியும்; நீடித்திருக்கும் நித்தியப் பொருளை மற்றவர்களுக்கு அளிக்க முடியும்.

அந்த இராஜ்ஜியத்தில், பேரின்ப மெய்ப்பொரு ளிருக்கும் அந்தத் தோட்டத்தில் நீங்கள் உமது சுய இச்சையைக் கொண்டே நுழைய வேண்டும். உமது சொந்த பலத்தைக் கொண்டும், உமது சொந்த ஆசை

யைக்கொண்டும், உமது பெருந்தகைமையைக் கொண்டும் இந்த நீடித்திருக்கும் பெருந்தகைமையை உண்டாக்க வேண்டும். உங்களுடைய பூரண பக்குவத்தைக் கொண்டும், கூர்ந்த விவேகத்தைக் கொண்டும் இந்தச் சாகா நிலையை உண்டாக்க வேண்டும். நான் உண்டாக்கித் தருவதாயிருந்தாலும் அல்லது மற்ற எவராகிலும் உண்டாக்கித் தருவதாயிருந்தாலும் அது அற்பமாயிருக்கும். ஆனல் நீங்களாகவே உங்களுடைய சொந்த அனுபவத்தைக்கொண்டு உண்டாக்குவீர்களானல் அது நீடித்திருக்கும்; நிலைத்திருக்கும்.

நீங்கள் அந்த நாட்டில் நுழைந்தபோது துக்கத்தையும் வருத்தத்தையும் இன்னும் பூலோக இன்பங்களைக் கொடுக்கும் கொடூர சுயகாமியத் தன்மைக்கு உங்கள் பேரிலுள்ள அதிகாரம் இழந்து விடுவதையும், அதனுடைய ஆளுகை சக்தி ஈனப்பட்டதால் உங்கள் பேரில் அதற்கிருந்த பேய்ப்பிடி போய்விட்டதையும் தெரிந்துகொள்வீர்கள்.

அந்தப் பரிபூரணத்தில் வளர்ந்து மெய்ப்பொருளிருக்கும் அக் கர்ப்பக்கிரகத்தில் நீங்கள் நுழைகையில் "தான் வேறு" என்று உமக்கிருக்கும் தன்மை கொஞ்சங் கொஞ்சமாய் நழுவி விடும். இதுதான் மெய்ப்பொருள்; இதுதான் ஐக்கிய பாரமார்த்திகம்; இதுதான் மானிடன் காணக்கூடிய பேரின்பம்.

## ௩. தன்னை வினவுதல்

இங்கு வந்திருக்கும் நம்மில் அநேகர் உண்மை யாகவே பெரிய ஆசாரியரை எதிர்பார்க்கின்றனர். எல்லா விஷயங்களுக்கும் அஸ்திவாரமாயும், பரிபூரணத் திற்கு மூலாதாரமாயும் அழகிற்கு அடிப்படையாயு மிருக்கும் அவரையே நாமும் பக்தியோடு எதிர்பார்க் கின்றோம். எனவே, நாம் சாதாரணமாகவே அந்தப் பரிபூரணத்தைக் குறிப்பாகக் கவனிக்கவேண்டும். அந்த அழகைக்காண எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டுமே தவிர, அற்புதமெனக் காட்டி நம்மை மயக்கும் விஷயங் களையும், புதுமையாக ஏற்படுத்தி வைத்திருக்கும் பரி பாஷைகளையும், பட்டப் பெயர்களையும் ஒரு புறமாய் நீக்கிவைக்க வேண்டும்.

எனது கருத்தை உங்களுக்கு விளக்கப்போகி றேன். ஆனால் நீங்கள் அதை ஆலோசிக்கவேண்டும்; அது சரி யென்று உங்களுக்குப் படுமானால் அதன்படி, உமக்கிருக்கும் உயர் பெருஞ் சாமர்த்தியத்தைக்கொண்டு தூய்மை பெற்ற சுய அறிவுடன் நடவுங்கள்.

எனது கருத்து இது:—நீங்கள் அநேக வருஷங்க ளாக வாசித்து வந்தீர்கள். அநேக நூல்களைக் கற்றதால் உங்களுக்கு வெவ்வேறு சுபாவங்கள் உண்டென்றும், நீங் கள் வேறு ஜாதியார் என்றும், மற்றவர்களை விட, இன் னும் என்னைவிட வித்தியாசப்பட்டிருக்கிறீர்கள்என்றும் கற்றிருக்கிறீர்கள். இன்னும் ஜன்மாந்திர வாழ்வில் அவரவர் விளக்கிக்காட்டவேண்டிய பகுதியொன்று அவ ரவர்களுக்குத் தனியாக இருக்கிறதென்று அறிந்திருக்கி றீர்கள். இப்போதோ நீங்களாகவே கண்டுகொண்ட அப்

பகுதியை நிறைவேற்ற வேண்டி, நிகழ்ந்த வருடங் களெல்லாம் முயற்சித்து வந்திருக்கிறீர்கள். நீங்கள் திடமுடனே, அல்லது உபாயமாகவோ, தலை நிமிர்ந்தோ அல்லது குந்தி குந்தி நொண்டி நடையிலோ, பெருந் தன்மைக்கும், அழகிற்கும், பரி பூரணத்திற்கும் கொண்டுபோகும் என்று நீங்கள் நினைத்த உன்னத மார்க்கத்தில் நடந்து கொண்டிருக்கிறீர்கள்.

நீங்களே உங்களை வினவும் படியான காலம் வரும். அப்போது "நான் கற்ற அறிவைக் கொண்டும், பட்ட யங்களைக் கொண்டும், பரிபாஷைகளைக்கொண்டும், பிதற் றும் சொற்களைக் கொண்டும் என்ன செய்தேன்? வருத் தப்படுகிறவர்களுக்கும், கற்க வேண்டுமென்று இச்சை கொண்டிருப்பவர்களுக்கும், இருட்டில் தடுமாறுகிறவர் களுக்கும் சந்தோஷத்தை எவ்வகையில் உண்டாக்கிக் கொடுத்தேன்"? என்று கேட்க வேண்டும்.

உம்முடைய பரிபாஷைகளாலும் பட்டங்களாலும் புத்தகங்களாலும் என்ன பாக்கியம் பெற்றீர்?

அற்ப விஷயங்களைவிட்டு நித்தியப் பொருளின் வழியே போகவைத்து எத்தனை பேரை மகிழச் செய் தீர்?

நீடித்திருக்கும் பேரின்பத்தை, ஒருபோதும் குன்றுப் பேரானந்தத்தை, ஓடும் மேகங்களால் மங்கா ஆனந்தக் களிப்பைக் கொடுத்தீரா? என்ன செய்தீர்கள் என்பதைப்பற்றி நீங்களே கேட்டுக்கொள்ளவேண்டும்.

படுகுழியில் ஜனங்கள் தவறி விழாதபடி அதைச் சுற்றி ஒட்டுச் சுவர் கட்ட என்ன ஏற்பாடுகள் செய்தீர்?

மனிதன் விழக்கூடிய ஆழமான அந்த ஆற்றங் கரை யோரத்தில் இருப்புக்கிராதி வேலியை எவ்வளவு தூரம் கட்டினீர்கள் ?

மேலேறிப் போகவேண்டியவர்களுக்கு ஒத்தாசை எவ்வளவு கொடுத்தீர்கள் ?

ஆனந்த நாட்டில் மங்காவொளியுடன் சதா சுந்தர மாயிருக்கும் அந்தத் தோட்டத்திற்குள் யாரையா வது ஒருவரை அழைத்துப்போக உமக்கு எவ்வளவு ஆவலிருந்தது ?

என்னையே நான் கேட்டுக் கொண்டிருந்தது போலவே, என்னோடு நான் நியாயமாடினது போலவே நீங்களும் நியாயமாட வேண்டும். உங்களை நீங்களே கேட்க வேண்டும்.

திருப்தி செய்துகொள்ள பரிபாஷைகளை யுண் டாக்கினீர். இவைகளை யெல்லாம் முக்கியமானவை, உயி ருக் குயிரானவை என்று மதித்துக் கையில் வைத்துக் கொண்டு நீங்கள் என்ன செய்தீர்கள் ?

உலகினருக்கு வெளிச்சங் கொடுத்து வழிகாட்டும் அந்த விலையுயர்ந்த இரத்தின பொக்கிஷத்தை எவ்விதம் வளர்த்து வந்தீர்கள் ?

அதை மற்றவர்களுக்கு எவ்வகையில் கொடுத்தீர் கள் ? எப்படி வளர்த்தீர்கள் ? மற்றவர்களை எப்படி வழி நடத்தினீர்கள் ?

வெவ்வேறு பெயர்களைக் கொண்டும், வெவ்வேறு வித ஜாதியார் என்று சொல்லிக்கொண்டும், மற்றவர்களை விட நாம் வேறு (பிரத்தியேகம்) என்று நினைத்திருப்பது மிக்க திருப்திகரமானதே ; கொண்டாடத் தகுந்ததே.

ஆனால் நீங்கள் இப்பேர்ப்பட்டவர்களா யிருக்கின்றவர்களானால் யாராவது ஒருவனை துக்கத்திலிருந்து காப்பாற்றி விட்டீர்களா?

நீங்கள் யாராவது எனக்கு—சாமானிய ஜன சமூகத்திலிருக்கும் எனக்கு—சுகத்தைத் தந்தீர்களா?

யாராவது என்னைத் துக்கத்திலிருந்து விடுவித்தீர்களா?

நான் பசியால் வருந்தியபோது நீங்கள் எவராவது தேவாமிர்த ஊட்டத்தைக் கொடுத்தீர்களா?

வருத்தப் படுகிறவனுடைய நிலையில் நின்று பார்க்குமளவு பரிதாபப்பட்டீர்களா? நீங்கள் என்ன ஏற்படுத்தினீர்கள்? என்ன உண்டாக்கினீர்கள்?

உமது வேலை யென்ன?

வெவ்வேறு சங்கங்களிலும், வித வித வகுப்பு இயக்கங்களிலும் நீங்களிருந்த போதிலும், உங்களுக்கு வெவ்வேறான வாசனா சுபாவமிருந்த போதிலும் நீங்கள் என் வேறாக இருக்கவேண்டும்?

என்னைவிட நீங்கள் எவ்விதத்தில் வித்தியாசப்படுகிறீர்கள்? உங்களுடைய வேலை என்ன? உங்களுடைய கருத்தென்ன?

காலமெல்லாம் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

உங்களுக்குக் கொடுத்த விஷயங்களை எவ்வகையில் நிறைவேற்றினீர்கள்? எந்த வகையில், எந்நிலையில் நீங்கள் இருக்கின்றீர்கள்? இவைகளால் உங்கள் ஒவ்வொருவருக்கும் அறிவில் தட்டினதென்ன?

இப்போது நானோ சாதாரண மனிதனா யிருப்பதால், என்னுடைய கருத்தின்படி நோக்கிப் பார்க்கும்படி உங்களைக் கேட்கப் பிரியப்படுகிறேன். என்னுடைய பலகணி வாயிலில் வந்து பார்க்கும்படி உங்களைக் கேட்கிறேன். அது என்னுடைய தேவலோகத்தை உங்களுக்குக் காட்டும்; எனது தோட்டத்தையும் எனது இருப்பிடத்தையும் காட்டும். அப்போது நீங்கள் செய்வதும் படிப்பதும், நீங்கள் எவ்விதமா யிருக்கிறீர், எவ்விதமாயில்லை, என்று மற்றவர் சொல்வதும், பாதகமில்லை யென்பதையும், மெய்ப்பொருள் வீற்றிருக்கும் அந்த இடத்திற்குப் போக உமக்குத் தீவிர இச்சை ஒன்றுதான் இருக்கவேண்டு மென்பதையும் அறிவீர்கள்.

உண்மையான பேரின்பம் அங்கிருப்பதால் அந்த இராஜ்ஜியத்தைப் பெறத் தகுந்ததே தவிர பிரயோஜனமற்ற பரி பாஷைகளைக் கட்டி அழுவதல்ல.

ஆகையால் உங்களை வந்து பார்க்கும்படி செய்ய எனக்குப் பிரியம்; நீங்கள் வந்து அதைச் சுகிக்க வேண்டுமென்று எனக்குப் பிரியம். பிறகு "ஓ! தாங்கள் வேறு மலை யுச்சியின்மே லிருக்கின்ற ஞானி" என்று எனக்குச் சொல்லமாட்டீர்கள், எனக்குப் பரி பாஷைகளைக் கட்டிவிட்டீர்கள்; என்னுடைய மெய்ப்பொருளை உங்கள் வார்த்தைகளால் மூடினீர்கள். என்றும் நம்பிக்கொண்டிருப்பவைகளை யெல்லாம் ஒழிக்கும்படி யான் உங்களைக் கேட்கவில்லை. சுபாவத் தன்மையை விடும்படி உங்களுக்குச் சொல்ல வரவில்லை. சரியல்லவென்று தட்டும் விஷயங்களைச் செய்யச் சொல்லவில்லை.

ஆனால் நான் கேட்பது யாதெனில்:— உங்களில் எவ ராவது ஒருவர் சந்தோஷத்துட னிருக்கிறீர்களா? யாராவது சாசுவதத்தை உருசி பார்த்தீர்களா? அமிர் தம் (சாகாநிலை) என்பது எப்போர்ப்பட்டது? மெய்ப் பொருள் என்பது எது என்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்கப் பிரியம். இதைக் கொண்டுதான் உங் களை மதிக்க முடியுமே தவிர மற்றவைகளாலல்ல.

பரிபாஷைகளைக் கட்டாதீர்கள். நித்திய மில்லாத வைகளைக் கொண்டும், வீணானவைகளைக் கொண்டும், சாரமில்லாதவைகளைக் கொண்டும், திடக் கருத்தையும் பரவசத்தையும் கொடாதவைகளைக் கொண்டும் மெய்ப் பொருளை மூடாதீர்கள்.

அந்த இராஜ்ஜியத்திற்குள் வந்து வசித்திருப்பீர் களானால் அப்போது மேதாவியின் (அம்சத்தை) பொறி யைப் பெற்றிருப்பீர்கள். உண்மையில் உலகை விருத் திக்குக் கொண்டு வருபவர்களுடனும், உலகினருக்கு இன்பமளிப்பவருடனும் சேர்ந்திருப்பீர்கள். அப்போது நீங்கள் அளிப்பவர்கள்; சிருஷ்டிப்பவர்கள். நீங்கள் செய்யும் ஒவ்வொன்றிலும் உங்களுடைய முத்திரை பதிந்திருக்கும்.

நான் கெட்டியான நிலத்திலிருக்கின்றேன். இது சேற்றி விருப்பவர்களுடையதை விட உறுதியானதே; அதாவது இன்னும் தாமாகவே செய்துகொண்ட தடை களை உடைக்கக் கஷ்டமா யிருக்கின்றதென்று மதித்து எனது இராஜ்ஜியத்தை அடைவது துர்லபம், அங்கு வருவதும் கஷ்டம் என்று நினைப்பவர்களுடைய சேற்று நிலத்தைவிட மிக்க மகிமை வாய்ந்ததே;

அழகிய பூமியே என்றாலும், நீங்கள் சேறு சகதியி லிருக்கிறீர் என்று வாஸ்தவத்தில் அறிவீர்களானால் வெய்யிலால் காய்ந்து கெட்டிப்பட்டு ஜிலுஜிலு வென்று சுத்தக் காற்றடிக்குப் தரைக்கும் போகத் தாமதப்பட மாட்டீர்கள்.

நீங்கள் இதைத் தெரிந்துகொண்டு நடக்கவேண் டும். மெய்ப்பொருளுக்கு ஆதாரமாயும், நித்தியத்திற்கு மூலமாயுமிருக்கும் இந்த இராஜ்ஜியத்தில் நீங்கள் நுழைந்திருந்தால் வாசனை சுபாவங்களாலும் பட்டங் களாலும் பிரயோஜனமில்லை என்பது தெரியும். அங்கு நீ, நான் என்று வேறுபடுத்தும் தன்மையில்லை. வந்து பார்க்க ஏன் தயங்குகிறீர்கள்? என்னைப் பின்பற்றி வரும் படி நான் உங்களைக் கேட்கவில்லை. ஆனால் உண்மையாய், நித்தியமாயுள்ள பொருள்களை நீங்களே வந்து பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தாரக அங்கத்தினராகிய நீங்கள் "அவர் வருகை யை" நம்பிக் கொண்டிருக்கிறீர்கள். அவர் சுவாசிக் கும் காற்றைச் சுவாசிப்பதின் அருத்தம் உங்களுக்குத் தெரியும்; அவர் பார்க்கும் சூரியப் பிராகாசத்தைப் பார்ப்பதின் அருத்தம் உக்களுக்குத் தெரியும்; அவர் புஷ்பத்தைப் பார்த்து மகிழ்வது போலவே நீங்களும் அதே பூவைப்பார்த்து மகிழ்கிறீர்கள் ஆதலால் உங் களைக் கேட்கிறேன்.

நீங்கள் அவரை உங்களுடைய போக்கின்படி இசைந்து வரச் செய்வித்து நீங்கள் நம்புவதை யெல் லாம் அவரைச் சரிஎன்று சொல்லும்படி செய்யப்போகி றீர்களா? நீங்கள் போகும் வழிதான் உன்னதமான

வழியென்று சொல்லி அவரை ஒத்துக் கொள்ளும்படி செய்யப் போகிறீர்களா? இப்படிச் செய்வீர்களாகில் மகிமையை நீங்கள் இழந்துபோனதாகக் காண்பீர்கள்; விலையுயர்ந்த மணியை இழந்ததாகக் காண்பீர்கள்; உங்களுடைய சூரியன் அஸ்தமாய் விட்டது, மற்றொன்று உதயமாகாது என்று காண்பீர்கள்.

நீங்கள் ஒவ்வொருவரும் பயப்படுகிறீர்கள். ஏனெனில் உங்களுடைய சிறு வழியை விட்டு, சிறு சாளரத்தைவிட்டு வந்து அவருடன் உலாவ உங்களுக்கு தைரியமில்லை; மற்றும் உங்களுடைய கருத்துகளுக்கும் மனப் போக்குகளுக்கும் ஒத்து வந்து அவர் உங்களுடன் உலாவவேண்டு மென்கிறீர்கள்.

ஆனால் ஒரு காலம் வரும்: அது நீங்கள் தெளிவாய்க்குறித்து வைத்திருக்கும் காலத்தைவிட நெருங்கி வருகின்றது. நீங்கள் மதித்திருந்ததை விட சுகமாய் நிகழும். அப்போது நீங்கள் பகுத்தறிந்து தழுவ சுறுசுறுப்பாயிருக்கவேண்டும். இவ்வித வார்த்தைகளை எத்தனையோ ஆயிரந்தரம் சொல்லிக் கொண்டிருந்தோம். கருத்தில்லாமலே இன்னும் சொல்லி வருகிறோம். இப்போது நீங்கள் தேர்ந்து எடுத்துத் தழுவவேண்டிய காலம் வந்து விட்டது. அவர் சொற்படி கேட்கப் போகிறீர்களா? காற்றைச் சுவாசிக்கப் போகிறீர்களா? அதே மலை மீது ஏறுவீர்களா? அதே பாதையில் போவீர்களா? அல்லது உங்களது பிடிவாதக் கருத்தின்படியும், உமது போக்கின்படியும், பக்ஷபாதக் கருத்தின்படியும் அவரை இணங்கிவரச் செய்யப் போகிறீர்களா?

இணங்கச் செய்விக்க முடியாது. ஏனெனில் நான் எல்லா ஜனங்களுக்கும் உரியவன். உண்மையில் அன்பு பாராட்டுபவர்க்கும் வருத்தப் படுகிறவர்களுக்கும் வேண்டியவன்.

உங்களுக்கு நடக்க வேண்டுமென்று பிரியமிருந்தால் என்னோடு நடவுங்கள்.

தெரிந்துகொள்ள வேண்டுமானல் என்மனதில் புகுந்து பார்க்க வேண்டும்.

உணர்ந்தறிய வேண்டுமானல் எனது இதயத்தின் வழியாய் உணரவேண்டும்.

நான் உண்மையில் அன்புடனிருப்பதால் நீங்களும் அன்புகொள்ள வேண்டும்.

உண்மையில் நான் இரக்கப்படுவதால் நீங்களும் இரக்கப் படவேண்டும். நான் ஒவ்வொன்றையும் அருமையாக மதிப்பதால் நீங்களும் அப்படியே மதிக்க வேண்டும்.

நான் ஆதரிக்கப் பிரியப்படுகிறபடியால் நீங்களும் ஆதரிக்க வேண்டும்.

இதுதான் எனக்குப் பிரியம். இதுதான் வாழ வேண்டிய வாழ்வு; இதுதான் பெற்றிருக்க வேண்டிய பேரின்பம்.

## ச. மெய்ப்பொருளைக் காணல்

நான் சொல்லுவதை நீங்கள் இரண்டு மூன்று நாட்களாகக் கேட்டுக்கொண் டிருந்தீர்கள். எனவே, உலகை என் கண்கள் வழியாய்ப்பார்க்க இச்சைகொண் டீர்கள். உண்மையாகவே யானும் சில காலமாய் மிகக் கூர்மை யுணர்வுடன் தீவிரமாய் யோசித்துக் கொண் டிருந்தேன். மேலும் இங்குவந்து கூடியிருப்பவர் அநேக ரிடத்தில் எனக்கு வாஸ்தவத்தில் பூரிக்கத் தக்க பிரிய மிருக்கிறது. ஆகையால் எனது பேரின்பமாகிய மெய்ப் பொருளை யான் கண்ட இடத்திற்கு, இன்னொரு முறை கூடுமானல் அடிக்கடி, உங்களை இட்டுக்கொண்டு போகப் பிரியப்படுகிறேன்.

ஆனல் அப்படி இட்டுக்கொண்டு போக எனது சொந்த அனுபவத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். சொல்லுவதால் எனக்கு மரியாதைகளும் கூழைக் கும் பிடுகளும் வருமென்றல்ல; மற்று என் மனதிலிருக்கும் கருத்தை விவரமாக உங்களுக்கு விளக்கிக் கொடுக்க, ஒருகால் அஃது உதவும் என்றே சொல்லுகிறேன்.

சில மாதங்களுக்கு முன் ஜன சஞ்சாரமில்லாத காடும் கானாறுமாய் நிறைந்த குன்றுகளிடையில் ஒரு நாள் ஒரு சிநேகிதருடன் உலாவிக் கொண்டிருக்கையில் "தியானஞ் செய்வதற்கு இது எவ்வளவு நேர்த்தியான இடம்" என்று அவருக்குச் சொன்னேன். அப்போது அவரும் என்னைத் தனியேவிட்டுக் கொஞ்சம் அப்புறம் போக நேரிட்டது. நான் திரும்பி நின்று கொண்டு மரத்தின் கிளைகள் கோணல் கோணலாய்ப் பின்னிக்

கொண்டிருக்கும் விநோதத்தைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தேன். அப்போது திடீரென்று எனது பேரின்பம் - எனது குரு-எனது ஆசாரியன்-நம் ஒவ்வொருவருக்கும் ஆசானாக இருக்கப்பட்டவர் என்னெதிரில் நடந்து வருவதைக் கண்டேன். அவரைக் கண்டதும் எல்லாம் அவர் வழியாய்ப் பார்ப்பதாக எனக்குத் தோன்றின. அவர் மூலமாய் மரங்களையும் பார்த்தேன்; மற்றெல்லாப் பொருள்களையுங் கண்டேன். ஆச்சரியமடைந்து அற்புத தரிசனத்தை நின்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். பிரசன்னமாகி வரும்படி அவரைக் கூவி அழைக்கும் ஆவல் அச்சமயத்தில் எனக்கில்லா விட்டாலும் அவர் வந்தார். நான் வீட்டுக்குத் திரும்பியபோது அவர் கூடவே வந்தார். எனக்கு வழி காட்டிக் கொண்டும் என்னைப் பார்த்துக் கொண்டும் என் அறைக்குப் போகும் ஒட்டு வழியில் கூடவே இறங்கி வந்தார்.

அது முதல் எல்லாப் பொருள்களையும் அவர் மூலமாய்ப் பார்க்க எனக்கு மிக்க ஆனந்தக் களிப்பாயிருக்கிறது. மரங்களையும், ஜனங்களையும் இன்னும் மேகங்களையும் மற்றெல்லாவற்றையும் அவர் வழியாய்ப் பார்க்கப் பாக்கியம் பெற்றேன். ஒரு சிறு வஸ்துவாகிய எறும்போ, புல்லறுகோ, குளத்திலிருக்கும் மீனோ ஒன்றை நான் பார்த்தபோது அதில் அவர் நிறைந்திருந்தார், நான் அதை அவர் மூலமாய்ப் பார்த்தேன். அப்பேர்ப்பட்ட இரத்தினத்தைப் பெற்றிருக்கும் ஆனந்தம், அப்பேர்ப்பட்ட துணைவரை சதா உபசரிக்கும் களிப்பு எனக்குத் தீவிர மாயிருந்ததால் நான்பாட வேண்டு

மென்றும் இதை மற்றவர்களுக்கும் தெரியும்படி செய்வித்து அவர்களையும் ஆனந்தப்படுத்த வேண்டுமென்றும் எனக்கு உற்சாகம் வந்தது. மற்றவர்களைத் தெரிந்துகொள்ளும்படி செய்து அவரைப் பார்க்கும்படி செய்வது பெருத்த கஷ்டமான விஷயங்களில் ஒன்று. அவர் அவரவருள்ளத்திலில்லாத வேறு ஒருவரல்ல, வெகு தூரத்திலுள்ளவருமல்ல, ஆனால் எங்கெங்கு இதயமும் மனதும் சுத்தமாயிருக்குமோ, எங்கெங்கு விசாரங்கள், துக்கங்கள், கஷ்டங்கள் சந்தோஷங்கள் இவை நிறைந்திருக்கின்றனவோ அங்கங்கெல்லாம் அவர் இருக்கிறார் என்பதை உற்றறியச் செய்வது கஷ்டந்தான்.

அநேக நோய்களைத் தீர்க்கும் சஞ்சீவி மருந்தை யான் வைத்திருந்தும் ஒருநாளிரவில் படுத்துத் தூக்கம் வராமல் இந்தப் பேரின்பத்தை மற்றவர்களுக்கு எவ்விதம் புகட்டமுடியும்? "கோவில் ஒன்றே, பள்ளிவாசல் ஒன்றே, குரு வெளிச்சம் தருபவர் ஒருவரே, நியதி அளிப்பவர் ஒருவரே, மெய்ப்பொருள் ஒன்றே, என்பதை அவர்களுக்கு எவ்விதம் நிச்சயப்படுத்துவது" என்று யோசித்துக்கொண்டிருந்தேன். நாம் வெவ்வேறு வழிகளில் நடந்துகொண்டிருக்கிறோம். நம்மில் சிலர் மிதி கல்லைக்கொண்டு ஏறியும், சிலர் ஊக்க தண்டங்களைக் கொண்டு நொண்டியும், சிலர் இரத்தம் பீரிட வெறுங் கால்களோடு நடந்தும், சிலர் சுத்த தேகங்களுடன் குறுக்கு வழியில் நடந்தும் போய்க்கொண்டிருந்த போதிலும் நாமெல்லோரும் அதே இடத்திற்கு எவ்விதமாய்ப் போய்ச் சேருவோம் என்று யோசித்துக்கொண்டிருந்தேன். நமது சந்ததத் துணைவர் இருக்கு

மிடத்திற்கு நாமெல்லோரும் கடைசியாய்ப் போய்ச் சேரவேண்டும். அங்குப் பிரிவினை இராது; பிரிவதுங் கிடையாது; அங்கு ஒண்டியானேம் என உணரும் தன்மை இராது; சுகமின்மை இராது.

போதுமான பலங் கொடுக்கவும் உங்களைச் சுற்றி யிருக்கும் மகத்தான விஷயங்களை நீங்களே உய்த் தறிந்து பார்க்கப் போதுமான அறிவையும் ஆற்றலையும் உங்களுக்குக் கொடுக்கவும் எனக்குப் பிரியம். நீங்க ளாகவே பார்த்துச் சேகரித்து வைத்திருந்தால் அது உம்முடைய சொந்தமாகிவிடும். இதை எவரும் எடுத் துப்போக முடியாது; உங்களிட மிருந்து எவராலும் அபகரிக்க முடியாது. பார்த்த பிறகு ஒருபோதும் சந்தேகப் படமாட்டீர்கள். “தனியாயிருக்கின்றேன்” என்றும் “போராடுகிறேன்” என்றும் ஒருபோதும் உங்க ளுக்கு இனித் தட்டாது. ஏனெனில் உலக முழுவதும் எவருக்காக ஏக்கங்கொண்டிருக்கிறதோ, அவரை நீங்கள் போகுமிட மெல்லாம் கூடவரும் சிநேகிதராகவும், சம்பாஷிக்கக் கூடிய உமது துணைத் தோழராகவும், பாதார விந்தத்தைப் பூஜிக்கக் கூடிய கடவுளாகவும் உங்களண்டை வைத்திருக்கிறீர்கள். ஆனல் நீங்கள் மாத்திரம் அவரைப் பார்த்துக் கொண்டிருக்க உங்களுக்கு மனம் வராது; மற்றவர்களும் அவரைப் பார்த்துக் களிக்கச் செய்விக்கப் பிரியம்வரும். இப்படித் தான் மெய்ப்பொருளைக் கண்டவர்களுக்கும். மெய்ப் பொருளின்மேல் அன்பு தீவிரமாய் உங்களுக் கிருக்கு மானல், இன்னும் அதை அதற்காகவே கண்டிதமாய் வைத்திருப்பீர்களானல் அப்போது நீங்கள்எல்லாரிடத்

திலும் அன்புபாராட்டுவீர்கள். மெய்ப்பொருள் ஒன்று தான் சுகம்கொடுக்கும் எனத் தெரிந்திருக்குமானல் அப்போது அதை மற்றவர்களுக்கும் கொடுத்துச் சுகிக்க உமக்கு இச்சை வரும்.

இப்படிச் சேர்ந்து சுகிப்பது எனது மகிமை; எனது ஆனந்தம். நான் எதைக் கோரியிருந்தேனே, எதற்காக ஏக்கங் கொண்டிருந்தேனே அந்த மெய்ப் பொருளை, எனது பூஜா மேடையைக் கண்டுகொண் டேன்; அங்கு முழங்கால் மண்டியிட்டுத் தொழமுடியும் என்றும், இனிச் சதாகாலமும் அங்கேயே இருப்பேன் என்றும், எனது பாக்கியத்தை எவரும் எடுத்துப் போக முடியாதென்றும் அறிந்துகொண்டேன்.

இக்காரணத்தைக் கொண்டு நீங்களாகவே இவ் விஷயங்களைப் பார்க்கும் திறமையை உங்கள் ஒவ்வொரு வருக்கும் கொடுக்க வேண்டுமென்று பிரியப்படுகிறேன். உங்களுக்கு அருட்புலமை தட்டும்படி செய்விக்கிறேன். ஏனெனில் நான் அதைப் பெற்றிருப்பதால் மற்றவர் களுக்குக் கொடுக்க எனக்குச் சுலபம். பெருதவர்கள் அப்படிக் கொடுக்க முடியாது. நான் சுகித்திருப்பதால் அந்த ஆனந்த ராஜ்ஜியத்தை, பெறத்தகுந்த இணை யிலா மெய்ப்பொருளைச் சுபாவமாகவே பகிர்ந்து உங்க ளுக்குக் கொடுக்க விரும்புகிறேன். அந்த இடத்திற்கு வந்தால் நீங்கள் உங்களையும், உமது கஷ்டங்களையும், உமது துக்கங்களையும் மறக்கக் கூடும். ஏனெனில் எல்லா விஷயங்களும் அவரில் ஆனந்த நிறைவாகி யிருக்கின்றன.

அஃதெப்படி என்ருல்:— நாம் மீனைப்போல அற்ப விஷயங்களாகிய தீயவலையில் அகப்பட்டுக் கொண்டிருக்

கிறோம். ஆனால் மீன் பிடிக்கிறவனும், மீனும், வலையும், ஜலமும் நீங்களாகவே இருந்தால் அப்போது துக்க மென்கிற உலகு, அதாவது துக்கத்தையும் வருத்தத் தையும், ஓடுஞ் சுகங்களையும் உண்டாக்கு மூலகு இல் லாமற் போய்விடும். ஏனெனில் சந்ததமாயிருப்பது எதுவோ அதை நீங்கள் வைத்திருக்கிறீர்கள்.

சந்ததமாயிருப்பதைக் கண்டுகொண்டேன் என்று நான் நினைத்து வைத்திருந்தது ஒருநாள் காணமற் போய்விட்டதாகத் தென்பட்டது. அதுமிக நல்லதொரு அனுபவமாக நேர்ந்தது. ஏனெனில் வாழ்வில் வளருவ தற்காகப் பற்றிப் பிடித்து வைத்திருக்கும் விஷயங்கள் கொஞ்ச காலமாவது விட்டு விலகிப்போக வேண்டும். இரண்டொரு மணிநேரம் வரையில் எனது விலையுயர்ந்த இரத்தினத்தைக் காணதிருந்தேன். அதனால் எவ்விதந் துக்கப்பட்டுக்கொண் டிருந்தேன் என்று என்னால் சொல்ல முடியாது. துக்கம் அடைத்துக் கொண்டு உள் ளுக்குள்ளே அழுது கொண்டிருந்தேன். அருமையாக வைத்திருந்த ஏதோ ஒன்றை இழந்தவனைப்போல் தீராத்துக்கத்தில் ஆழ்ந்திருந்தேன்; பிரமித்திருந்தேன்; குழப்பத்தைத் தவிர மற்றயாதும் காணாத மாயா நிலை யிலிருந்தேன். பிறகு எனது பிராண நாதரான அவரைத் தேடப்புறப்பட்டு வெளியே போனேன். நான் கொஞ்ச தூரம் போனதும் அவர் திடீரென்று ஒரு மரத்தெதிரில் தென்பட்டார். அம்மரத்தை அவர் மூல மாய்ப் பார்த்தேன். மறுபடியும் அவரைக் காண்பதற் காக அந்த ஆனந்த இராஜ்ஜியத்தை, அந்த மெய்ப் பொருளை மறுபடியும் கண்டு களிக்க அவரை இழப்பது

தகுதியானதே. சில மணிநேரம் வரையில் இருளடைந்திருந்தது பெறத்தகுந்ததே. அதுமுதல் அவரை என்னுடன் வைத்திருக்கின்றேன். அவரில் வாழ்ந்துகொண்டும், அவர் கைபிடித்துக்கொண்டும் அவரில்என்னிலையை வைத்துக் கொண்டும் இருப்பதால் வாஸ்தவத்தில் விலையுயர்ந்த ஏதோ ஒருபொருளை வைத்திருக்கும் உலகினரைப் போலவே நானும் எல்லாருக்கும் கொடுக்கப் பிரியப்படுகிறேன். ஆனால் நான் பார்த்தபடியே நீங்கள் பார்க்க வேண்டுமென்று எனக்குப் பிரியமில்லை. ஏனெனில் அந்த அற்புதத்தை உங்கள் சொந்தக் கண்களால் காணவேண்டும். அவருடைய அழகைப் பார்க்க வேண்டும். உமது இதயத்தால் அவருடைய மகிமையை உணரவேண்டும். அப்போது நீங்கள் வைத்திருப்பது உங்களுடையது ; நீங்கள் ஏற்படுத்திக் கொண்டது உங்களுக்குச் சொந்தம். மானிடன் பெறத் தகுந்தது அது வொன்றுதான் என்று எனக்குத் தெரிந்திருப்பதால் உங்களுக்குச் சொல்லுகிறேன். எனது வானுலகத்தை, அந்தச் சோலையில் எனக்கிருக்கும் பகுதியை, நீங்கள் வந்து பார்க்கும்படி பிரியப்படுகிறேன். நீங்கள் அங்கு வந்து குளுகுளு வென்றிருக்கும் அந்தச் சந்தத நிழல் சுகத்தை உண்மையில் அனுபவித்த பிறகு, உமக்கு என்ன நேரிட்ட போதிலும், நீங்கள் எவ்வித வருத்தங்களால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தபோதிலும் அஃது உம்மை அசைக்காது. ஆனால் நீங்கள் எதையும் வேண்டும் எனக் கொள்ளாமல் கொடுப்பதாலும், அழிக்காமல் உண்டாக்குவதாலும், கொல்லாமல் பாதுகாப்பதாலும் இவ்வகைக் குணாதிசயத்தின் முத்திரையை உலகத்தில் பதியவைப்பீர்கள்.

எனது ஊற்றில் உங்களை அருந்த வைப்பேன். அந்த நறுமணக் காற்றைச் சுவாசிக்கச் செய்வேன். அப்போது நீங்களே உலகை ஆனந்திக்கச் செய்யக் கூடிய சிருஷ்டி கர்த்தராகவும் மேதாவிகளாகவும் ஆகி விடுவீர்கள். அந்த இராஜ்ஜியம் உங்களுக்குக் கிடைத் திருந்தால் பூவுலகை இச்சிக்கமாட்டீர்கள். பாரமார்த் திகத்தின் சாரமாகவும், அவரை விளக்கிக் காட்டும் மூர்த்தியாகவும், எப்போதும் இரக்ஷிப்பவராகவும், உப சரிப்பவராகவும் இருப்பீர்கள்.

இக்காரணத்தைக் கொண்டு நீங்கள் தூங்குவதை விட்டு விழிப்புடன் என்னோடு கலந்து நடந்து வர வேண்டும். அற்புதத்தை நீங்களாகவே அறிந்துணர வேண்டும். அழகை நீங்களே காண வேண்டும். விலை யுயர்ந்த பொருளை நீங்களே சேகரிக்கவேண்டும் என்பதே எனது பிரியம். கண்டு கொண்ட பிறகு ஜனங்களையும் உண்மைப் பொருளைப் பார்க்கச் செய்யக் கூடும்; “ நீங்கள்தான் மெய்ப் பொருள் ” எனவும், அவர்களும் அதன் பாகமாக ஆக்கிக் கொள்ளவும் கூடுமென்றும் அவர்களை உணர வைக்கக்கூடும்.

அப்போது சண்டை சச்சரவுகளெல்லாம் நின்று விடும். எல்லாச் சமயங்களும், சுபாவங்களும் ஒரு மிக்கச் சேருமென்பதைப் பார்த்தால் தெரியாதா? நீங்கள் அவருடனிருப்பீர்கள்; அவர் உங்களிலிருப்பார். நீங்கள் எங்கே போனாலுஞ்சரி, எந்தெந்த தேசங்களில் திரிந்தாலுஞ்சரி வருத்தப்படுகிறவர்களுக்குச் சுகத் தைக் கொடுப்பீர்கள்; ஆனந்தத்தையும் அறிவையும் அளிப்பீர்கள்.

ஆதலால் எனது தோட்டத்திற்குள் உங்களை இட்டுக்கொண்டு போகப் பிரியப்படுகிறேன். எனது இருப்பிடத்திற்கு உங்களை அழைக்கிறேன். அந்த ஆனந்த நாட்டிற்கு உங்களை இட்டுக்கொண்டு போவேன். அனுபவிகளைப் போலவும், வருத்தப்பட்டுத் தேர்ந்த வர்களைப் போலவும் நீங்கள் நடக்க வேண்டும்; நீங்கள் உங்களுடைய கக்க தண்டங்களால் நடந்தாலும் சரி, வெறுங்காலோடு நடந்து வந்தாலும் சரி பாதகமில்லை. அவ்விடம் போய் நாம் சேர்ந்தால் போதும்; நீங்கள் ஒரே, வழியோடே போனாலுஞ்சரி, அல்லது வெவ் வேறு வழியாய்ப் போனாலுஞ்சரி, பாதகமில்லை. ஏனெ னில் எல்லா வழிகளும் அதே ஆனந்த இராஜ்ஜியத்தில் கொண்டு போய்விடும்.

நீங்கள் தெரிந்து கொள்ளாதபோது (இஃது எனது கனவல்ல, நான் ஏதோ உங்களைக் கவர்ந்திழுக்க உண்டாக்கிய அற்ப விஷயமல்ல,) நிச்சயமென்று இதை உங்களை உற்றறியச் செய்வது மிகக் கஷ்டம்.

என்றாலும் இதை எனது மனோராஜ்ஜியமாகக் கருதுவீர்களானால் இப்பேர்ப்பட்ட மனோராஜ்யஞ் செய் வது உற்றதல்லவா? ஆனால் அது மாயாப் பிரதேசக் கற்பனா விவகாரமல்ல; கற்பிதமான கட்டுக்கதையு மல்ல. இப்பேர்பட்ட விஷயத்தைக் கட்டிவிடமுடியாது. ஏனெனில் இந்த இராஜ்ஜியம் உண்மையானது; மாறாத மெய்ப்பொருள் இருக்குமிடம் இது.

இதைக்காண, மனதாலும் இதயத்தாலும் ஏங்கி ஆராய்ந்து கொண்டிருக்கும் உங்களை வந்து சுகிக்கும் படி கேட்கிறேன். நீங்கள் வருத்தப் பட்டுக் கொண்

டிருந்த போதிலும் எல்லாவித விவகார வர்த்தமானங் களிலும் உண்மையில் சந்தோஷமா யிருக்க வேண்டு மென்று கேட்கிறேன். நான் அதைக் கண்டு கொண் டேன். மானிடன் ஒருவன் காணக்கூடுமானால் ஆயிரக் கணக்கானவரும் இன்னும் இலக்ஷக் கணக்கானவரும் காணக்கூடு மல்லவா !

இதுதான் (ஆனந்தமாயிருப்பது தான்) மெய்ப் பொருள் ; இதுதான் பூஜா மேடை ; நீங்கள் தொழக் கூடிய கோவிலும் இதுவே. இங்கு சந்ததத்தோடு கூடி யிருக்கலாம். இங்கு சாகாநிலை என்பது எப்பேர்ப் பட்டது என்று தெரிந்து கொள்ளலாம். பிறகு நீங்கள் உண்மையில் ஆசாரியராகி விடுவீர்கள் ; இரக்ஷகராக இருப்பீர்கள் ; கருணாகரராக வருவீர்கள். அந்த நித்தி யப்பொருளைப் பலமாய் உய்த்துணர்ந்து, தீவிரமாய்ச் சிந்தித்து, அதற்கென்றே வாழ்ந்து கொண்டு, அதற் காகவே இதயத்தைத் தூய்மையாக்கி வைக்கும்போது நீங்கள் அந்த ஆனந்த நாட்டிலிருப்பீர்கள். அங்கிருந்து வெளியே எங்கும் போகலாம், மற்றவர்களுக்கு உமது கடாக்ஷத்தை அளிக்கலாம்.

இக்காரணத்தைக் கொண்டு கூடியவரை என்னிடத் திலுள்ளதை உங்களுக்குக் கொடுத்து மாற்றிக்கொள்ள எனக்குப் பிரியம். என்னிடத்திலிருப்பவைகளை எல் லாம் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். என்னுடைய மனதையும், இதயத்தையும் என்னிடத்திலிருக்கப்பட்ட எல்லாவற்றையும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம் ; புசிக்கலாம் ; சுகிக்கலாம். ஏனென்றாலோ நான் அதைக் கண்டு கொண்டதால் மறுபடியும் எப்போதும் அதைக்

காண முடியும். கண்ணில்லாதவர்களுக்கே அதுதேவை; பார்த்தவருக்கு ஏராளமா யிருப்பதால் தேவையில்லை. உங்களிடத்தில் அதிகமாயில்லை; என்னிடத்தில் அதிக மாயிருக்கிறது. நீங்கள் வைத்திருப்பது மிகக் கொஞ்சம். என்னிடத்திலிருப்பது மிக அதிகம். ஆதலால் உங்களுக்குத்தேவை; என்னிடத்தில் போதுமானதற்கு மேலிருக்கிறது. ஆகையால் நாம் ஏன் மாற்றிக்கொள்ளக் கூடாது? மெய்ப்பொருளின் கண்கள்வழியாய் உலகை ஏன் பார்க்கக்கக் கூடாது? சந்ததத்தின் இதயத்தின் மூலமாய் உலக வருத்தங்களை ஏன் உணரக் கூடாது? நீங்கள் பார்த்து உணர்ந்தவுடனே சேவகப் பணியைத் தவிர மற்றது யாதும் உங்களால் செய்யவராது. அன்பைத் தவிர வேறு எதையும் பாராட்ட முடியாது. தான் எனும் தன்மையைக் கண்டிதமாய் மறக்கச் செய்யும் அந்த மெய்ப்பொருளுடன் சேர்ந்து, தொண்டு செய்துகொண்டு, அன்பு பராட்டும்போது நீங்கள் உண்மையான சிஷ்யர்களாவீர்கள். உண்மையில் அடியாராவீர்கள். உண்மை அன்பராவீர்கள்.

தெரிந்து கொள்வதற்கு முன் அவருடைய பகுதியாகவும், அவரைப் போலவும், வயலிலுள்ள அழகிய புஷ்பத்தைப் போலவுமிருக்க வேண்டுமென்ற ஆசை உங்களுக்கிருக்க வேண்டும்.

அப்போது நான் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். காதோடு சொல்வதானாலும் ஒவ்வொன்றையும் நீங்கள் கேட்க முடியும்.

## ரு. பிரிவினையகற்றல்

நமக்குப் பிரியமாயுள்ளவர்க ளிடமிருந்து பிரிந்து போகும்போது, கிஞ்சித்து தட்டும் மனவாட்டமும், சற்று மனதை அசைக்கும் துயரமும் நம் ஒவ்வொருவருக்கும் உண்டாவது இயல்பே.

நாம் எல்லோரும் கொஞ்ச காலமாகிலும் அந்தச் சுகந்த தோட்டத்தில்போய் அதனுடைய நிழல் சுகத்தில் ஆனந்தித்திருந்தோம் என்று எண்ணுகிறேன். உண்மையில் ஆனந்தம் எப்படிப்பட்டது என்று தெரிந்து கொண்டோம். அந்தப் பேரின்பத்தை உருசி பார்த்து விட்டோம். அது கொஞ்ச நேரமா யிருந்தபோதிலும், அந்தக் களிப்பில், அந்தப் பரவச ஆனந்தத்தில், அந்த உன்னத சந்தோஷத்தில் வாழ்ந்தோம். அந்த இடத்தில் நாம் வாஸ்தவத்தில் வசிக்கும்போது தான் அது கிடைக்கின்றது.

அந்த ஞான ஊற்றின் உருசி நமக்குத் தட்டினவுடன், அந்த மெய்ப்பொருளின் வாக்கைச் செவி சாய்த்துக் கேட்டபோது எல்லா விசாரங்களும் :—இக் கொட்டகை வாசத்தை விட்டு நாம் பிரிந்து போகும் போது நமக்குத் தட்டும் துக்கங்கள், வருத்தங்கள் யாவும் மறைந்து போகும். ஏனெனில் நாம் எங்கிருந்த போதிலும் ஒவ்வொரு நிமிஷமும், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வருஷமும் அந்தத் தோட்டத்தை நம்மைச் சுற்றிலும் உண்டாக்கிக் கொண்டே யிருப்போம். அந்த அழகை மற்றவருக்குக் கொடுத்துக் கொண்டே யிருப்போம். அந்தத் தேவாமிர்தத்தை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் கொண்டே யிருப்போம்.

அந்த இராஜ்ஜியத்தை நாம் சுகித்த பிறகு அந்த இன்பத்தை மற்றவர்களுக்குப் பகுத்துக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கக்கூடியது மெய்ப்பொருள் ஒன்றே, நிலை ஒன்றே, என்று தெளிந்த நிச்சய மிருக்க வேண்டும். அஃது உண்மையில் மனதில் தட்டி அறிவாகியபோது பிரிந்திருக்கின்றோம், தனியாய் விட்டோம், மற்றவரை விட வேறாயிருக்கின்றோம் எனும் உணர்வு கண்டிதமாகவே போய்விடும். உலகில் ஏதோ ஒரு சிலருக்கு வருவதுபோல் அந்நிலை நமக்கு ஏற்படு மானால், அப்போது அஃது உலகத்தாருக்கு ஒரு பிர மாணமாகி விடும். அதைக்கொண்டு அவர்கள் தம்மு டைய நிலையை ஒத்துப்பார்த்துக்கொள்ள முடியும். இதை ஜனங்கள் எதிர்பார்க்கக் கூடும்.

நாம் கூட்டத்திலிருந்து பிரிந்து போகும்போது நீங்கள் ஒவ்வொருவரும் இந்த ஆனந்தத்தை, உங்களு டைய சுய வகையில் உங்களுக்குத் தெரிந்தபடி எடுத் துக்கொண்டு போகக்கடவீர். அதைப் பத்திரமாய்க் காப் பாற்றி உங்களிடத்தில் வைத்துக்கொள்ளலாம். அல்லது அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களை விற்பவனைப் போல் எடுத்துப்போய் மற்றவருக்குக் கொடுக்கலாம். வாசனைப்பொருள் விற்பவன் வாஸ்தவத்தில் சுகந்தத் தைச் சுகிக்கிறான். நீங்கள் சேர்த்திருக்கும் வாசனையை மற்றவரும் வந்து சுகிக்க அவர்களைக் கூப்பிடுங்கள். ஆனால் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டு மானால் நீங்கள் முதலில் சேகரித் திருக்கவேண்டும். ஆனந்த நாட்டை உங்களுடன் நீங்கள் எடுத்துப் போக வேண்டும். இந்தப் பேரின்பம் உம்முடைய மனோ

ராஜ்ஜியமாயிருந்தாலுஞ் சரி, அல்லது என்னுடையதாயிருந்தாலுஞ் சரி, நீங்கள் அதைத் தெரிந்திருக்கவேண்டும் என்கிற தீவிர ஆவல் எனக்கிருக்கின்றது.

உங்களுக்குள் இந்தப் பேரின்பத்தை வைத்திருக்கும் வரையில், மெய்ப்பொருளை உள்ளுக்குள் நீங்கள் உணர்ந்தறிந் திருக்கும் வரையில், அந்தச் சாந்தமும் அமைதியும் உமக்கு இருக்கும் வரையில் உண்மையில் ஞானகாரமா யிருக்கும் தேவ புஷ்கரணியின் உருசியைக் கண்டு சுகித்தீர்கள்.

நாம் எல்லோரும் ஏககாலத்தில் அதே வஸ்துவை ஒரே விதமாக உருசிபார்க்க முடியாவிட்டாலும் நாமெல்லாம் அதே ஊற்றில் அருந்துவோம் எனும் நிச்சயமிருக்கிறது.

நாம் புத்தியுடன் செயலின்றிச் சும்மா இருக்கவும், அறிவுடன் அமைதியாயும், விவேகத்துடன் சாந்தமாயும் இருக்கவும்பழகவேண்டும். புத்தியுடன் சும்மாவிருப்பது என்பது தேக்க மல்ல; ஏனெனில் சும்மா காத்துக்கொண்டிருக்கும் போது அடுத்த வேலை யாரம்பிக்கச் சௌகரியம் செய்து கொள்ளக்கூடும். விவசாயி ஒருவன் பூமியைச் சித்தப்படுத்துவதுபோல் உங்கள் சோலையைச் சித்தப்படுத்த வேண்டும். சிறு பூண்டுகள், களைகள் முதலியவைகளைப் பிடுங்கவேண்டும்; உமது தோட்டத்தைக் கெடுத்து அவலக்ஷணமாக்கும் சிறு கற்களையும் எடுத்தெறிய வேண்டும். பலன் படாதவைகளை எல்லாம் ஒழிக்கவேண்டும். புஷ்பத்தை வளரவிடாது தடுக்கும் எல்லாவற்றையும் வெட்டிப் போடவேண்டும். சிறு மக்கள் உண்டாக்கும் தோட்டங்களிலிருக்கும் அவலக்ஷ

58825

ணங்களையும் அற்பமான சிறியவைகளையும் அணுக விடாதீர்கள். நீங்கள் இவ்விதஞ் செய்வீர்களானால் அப்போது அறிவுடன் செயலின்றிச் சும்மாவிருக்குந் தன்மையை விருத்தி செய்து கொள்வீர்கள்.

கீதம் பாடினபோது, மெய்ப்பொருளின் உண்மை வாக்கு பேசினபோது, உமக்குள் பதிற் சொல்லும்படியான ஆன்ம சக்தியும், வாக்கும் இருக்கும். அப்படியிருந்தால் நாம் எல்லோரும் கூடிப் பாடக்கூடும். அப்போது நமது கீதம் காற்றில் நிரம்பும்; ஜனங்களுடைய இதயத்தை நிறைவாக்கும்.

அப்படிப்பட்ட கீதத்தை நாம் பாடினபோது, அப்படிப்பட்ட மெய்ப்பொருளை ஒன்றாய்க்கூடி உணர்ந்தறியும்போது, பிரிவினை என்பது இராது. அப்போது நீங்கள் கொடுப்பவராயிருப்பீர்கள். நான் எடுக்கிறேன் என்றாவது, அல்லது நான் கொடுக்க நீங்கள் எடுக்கிறீர்கள் என்றாவது கருத்திராது. நாமெல்லாரும் அந்தச் சோலையில் வாழ்வோம். ஒரே விதமாய் எல்லோரும் உணர்ந்தறிவோம். அப்படி இருக்கும்போது பிரிவினை எப்படி வரும்? மற்றவனைவிட நாம் வேறு எனும் கருத்து எப்படி உண்டாகும்? இந்த உணர்வு, அதாவது அறிவாற்றலுடன் சும்மாயிருக்கும் திறன், வேறு பலத்தை, புதிய பிராணனை, புது விதமாய் அறியும் அறிவைக் கொடுக்கும்.

இவ்விதமாய்ச் சும்மாயிருக்கும் தன்மையும் அமைதியும் இருந்தால் உமக்கு அநீதி, துன்பம், குறும்பு, தீங்கு, எது நேர்ந்தபோதிலும் உமது மனதையும் இதயத்தையும் சரியான வழியில் வைத்திருப்பீர்; வன்

னெஞ்சமுடையவராக மாட்டீர்; வெறுப்புடனிருக்க மாட்டீர்; அல்லது அடக்கிய அடிமையாகமாட்டீர்.

நமக்கோ நாம் எவ்வளவு வித்தியாசப்பட்டிருந்த போதிலும், எவ்வளவு அறிவாளிகளா யிருந்தபோதிலும், பெரியவராகவோ அல்லது சிறியவராகவோ இருந்தாலும் அந்தச் சோலையில் வித்தியாசமில்லை; ஏறத் தாழப் பார்ப்பதில்லை. தான் வேறு எனும் உணர்வை இழந்ததால் அங்கு ஆணவத் தன்மையுடன் போட்டிப் போராட்டமுமில்லை. நாம் அந்த நாதத்தைக் கேட்டுக் கொண்டிருக்கும் வரையில், அந்நறுமணக் காற்றைச் சுவாசித்துக்கொண்டிருக்கும் வரையில் தான் என்பதை மறந்து விடுகிறோம். மற்றவனுடையதைவிட நாம் மேலானவர் எனும் பிராந்தி போய்விடும்.

இந்தத் தோட்டத்தில் தெய்வீகமாக ஆகவேண்டும். ஆனந்த பரவசத்தில் பித்தங் கொள்ளவேண்டும். அப்படி ஆகவேண்டுமானால் இந்தப் பேரின்பச்சோலைக்குள், மெய்ப்பொருளான சந்ததம் இருக்கும் இந்த இராஜ்ஜியத்திற்குள் வரவேண்டும். நீங்கள் அதில் நுழைந்த பிறகு எப்போதும் வெளியே போகவும் முடியும்; திரும்பி வரவும் முடியும்.

துக்கம் இருந்தபோதிலும், வருத்தமிருந்தபோதிலும், தெய்வீக விசாரணையால் பிறந்த திருப்தி கொண்ட நிம்மதி நிலையில் கொப்பளிக்கும் ஊற்று உங்களுக்குள்ளிருக்கும். அந்தச் சிகரத்திலிருக்கும் பரவசத்தை உருசி பாராதவர்களுக்கு மெய்ப்பொருளைக் கொண்டு கொடுப்பவரா யிருக்கக்கூடும்.

நீங்கள் இதைச் சாதாரண வாழ்க்கையில் விருத்தி செய்துகொண்டுவரவேண்டும். போராடிக் கொண்டல்ல,

அல்லது அசாதாரண வகையிலுமல்ல. அந்தரங்க வாக்கு நம்மிடத்திலிருந்தால் கஷ்டப்பட்டுப் பெறவேண்டும் எனும் குணங்களெல்லாம் தாமாகவே வரும்.

ஜனங்கள் தமது துரதிருஷ்டத்தைப் பற்றியும் சிறு கோபாவேசங்களைப்பற்றியும், சிறு பாபச் செயல்களைப்பற்றியும் விசாரப்படுகின்றனர். பெருந்தன்மையாயும் அழகாயும் பரிபூரணமாயு மிருக்கவேண்டுமென்ற அந்தரங்க உணர்வு இருக்கும் பட்சத்தில் இவைகளைப் பற்றிப் பாதகமில்லை. இவைகளால் வருவது ஒன்றுமே இல்லை. அந்த உணர்வைத் திடமுடன் பெற்றிருந்தால் உங்களை யாதும் அசைக்கமுடியாது. நீங்களும் அதன் மேல் அடுக்கு அடுக்காய்க் கட்டிக்கொண்டே மேலுக்குப் போகலாம்; ஆகாயத்தில் உயர நக்ஷத்திரத்திற் கருகில் போகக்கூடும். உங்களை ஒருபோதும் அசைவிக்க முடியாது; உமது அஸ்திவாரம் எப்போதும் பலவீனப் படாது.

நீங்கள் இந்த இராஜ்ஜியத்தில் நுழையவேண்டும். தேவ புஷ்கரணியில் அருந்தவேண்டும். நீங்கள் எல்லோரும் எனது சோலைக்கு வரவேண்டும். அந்தச் சோலைக்குள் நுழைந்தபோது உங்களுடைய அஞ்ஞானத்தையும் சிற்றறிவையும் தூர எறியவேண்டும். நீங்கள் முக்கியமென்று மதித்து வைத்திருக்கும் விஷயங்கள் யாவும், நீங்கள் விலையுள்ளதென்று வைத்திருக்கும் யாவும் நிலையில்லாதன. ஆதலால் அங்கு வைத்திருக்க முடியாது.

நீங்கள் விவேகத்துடன் சித்தமாக்கிக் கொண்டு யோசனையுடன் மனம் நாட்டுவீர்களானால் அப்போது

இந்தக் கீதாநாதத்தைச் சாசுவதமாகக் கேட்பீர்கள்; அவருடன் சாசுவதமாகக் கூடி யிருப்பீர்கள். நீங்கள் அவருடைய தோழர்களாய்ச் சதா யிருப்பீர்கள்.

அது வாழ்வை மெத்த அலங்காரமாகச செய்யும், நாள் முழுவதும் நிமிஷத்திற்கு நிமிஷம் ஆரோக்கியத்தையும் அமைதியையும்கொடுக்கும் என்று உங்களுக்குத் தெரியவில்லையா? அப்படிப்பட்ட இராஜ்ஜியத்தை வெற்றி யடைவதற்குப் போராட்டம், கஷ்டம், சந்தோஷம் எல்லாம் வேண்டியனவே.

துரதிருஷ்ட வசமாய்க் கேட்கக் காதில்லாத வருக்கும், இதைக் கேட்டிராதவருக்கும் நாம் வெளியே போய் இக்கீதத்தைப் பாடவேண்டும். அப்படிச் செய்ய நீங்கள் இந்தத் தோட்டத்திற்குள் வரவேண்டும். அதிலிருக்கும் மலர்களைக் கைநிறையப் பரித்துச் சேர்த்தெடுக்க வேண்டும். அவைகளைக் கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும். அது உங்களிடத்திலிருக்கும்போது அதைக் கொடாமலிருக்க உங்களால் முடியாது. உங்களிடத்தி வில்லாதலால் அதைக் கொடுக்கும் விதம் உங்களுக்குத் தெரியவில்லை. உங்களுக்குக் கிடைத்தவுடனே எப்போதும் கொடுக்க முடியும்.

பரிபூரண மிருக்கும் அந்த மலைஉச்சிக்கு வாருங்கள், நாமெல்லோரும் போவோம். அங்கு அழகு இருக்கின்றது. அங்கு ஏக ஐக்கிய உணர்வும், உண்மைச் சிநேகிதமும், உண்மைக் கனிகர அன்பும் இருக்கின்றன. பிறகு வாழ்வில் எதைப் பற்றியும் விசாரப்பட மாட்டீர்கள். போராட மாட்டீர்கள். வருத்தமும்பட மாட்டீர்கள். இவைகளுக் கெல்லாம் ஓர் அருத்தம்

இருந்தபோதிலும் இவைகள் தாமரை இலை நீர்போல் விழுந்துபோம். தாமரையைப்போல் அசுசிச் சேற்றில் நீங்கள் வளர்ந்து, பிறகு சுத்தமாய் அழகுடன் வெளி வருவீர்கள். இப்படிப் பட்டதாகும் அந்த ஆனந்தநாடு.

ஆனால் அந்த நாதவாக்கு, உங்களை வழி நடத்தும் அந்தப் பரிசுத்தவாக்கு, உங்களுக்குத் துணையாயிருக் கும் அந்த உண்மையான யூக அறிவு, உங்களிடத்தில் இருக்க வேண்டும். அதை வைத்திருப்பீர்களானல் அப் போது நீங்களும் அவரில் ஒரு பாகமாகி விடுவீர்கள். அப்போது நீங்கள் அவர் இருப்பிடமாகி விடுவீர்கள்.

வாழ்வின் அலங்காரமும் அங்கிருக்கின்றது. காட்சி முழுவதும் அங்கிருக்கிறது. வெற்றி பெற வேண்டிப் பெருத்த இராஜ்ஜியம் வேண்டியதில்லை.

நீங்கள் அவரைப் பெற்றவுடன், அவர் பேச ஆரம்பித்தபோது, அவர் உமது கண்கள் வழியாய்ப் பார்க்கும்போது, கிளைகளின் மூலமாய்க் காற்று கீதம் பாடுவதும், ஒவ்வொரு நக்ஷத்திரமும் பிரகாசிப்பதும், ஒவ்வொரு மனிதனும் அன்பு பாராட்டுவதும் அதன தன் பொருள் உங்களுக்குத் தெரியும்.

நீங்களே ஒவ்வொரு வஸ்துவாயும் இருப்பீர்கள்; அவர் உங்களிடத்திலிருப்பார்.

ஆதலால் உங்களைத் தூண்டுகிறேன்; வரும்படி கெஞ்சிக் கேட்கிறேன். கூடுமானல் என்னுடைய இத யத்தையும் மனதையும் உங்களுடையதுடன் மாற்றிக் கொள்ளப் பிரியப்படுகிறேன். ஏனெனில் இஃது என் னிடத்திலிருக்கிறது; உங்களில் சிலரிடத்திலில்லை.

நீங்கள் அதைப் பெற்றவுடனே பகிர்ந்து கொடுக்க விரும்புவீர்கள். ஏனெனில் அப்போது மற்றவருடைய

துக்கத்தையாவது வருத்தத்தையாவது பார்த்துப் பொருமையோடிருக்க முடியாது. இந்த இச்சை இயல்பானது; அழகானது. இதில் அற்புதமானதும் அசாதாரணமானதும் ஒன்றுமில்லை. விஷயங்களுக் கெல்லாம் நீவிர் மூலகாரண மாகியதாலும், வஸ்துக்களைச் சிருஷ்டிக்கும் கர்த்தாவானபடியாலும், நீங்கள் மாற்றவும் சிருஷ்டிக்கவும் அவலட்சண மானவைகளை அலங்காரமாக்கவும், துக்ககர மாயுள்ளவரைச் சுகமாயிருக்கச் செய்யவும் விரும்புகிறீர்கள்.

இக்காரணத்தைக் கொண்டு மேலேறிப் போகத் தக்கதே, கஷ்டப்பட்டு ஆனந்த நாட்டைப் பெறத் தகுந்ததே.

நீங்கள் அந்தத் தோட்டத்திற்கு வரவேண்டும். அங்குச் சாசுவதமாய் வசிக்கவேண்டும்; அங்குப் போய்ச் சேரும் வரையில் அதை உணர்ச்சியுடன் தடவிக்கொண்டிருக்க வேண்டும்; சதா கஷ்டப்பட வேண்டும். பிறகு கஷ்டப் படுவதை நிறுத்தலாம்; பிறகு சூரியப் பிரகாசத்திலிருக்கும் புஷ்பத்தைப்போல் அருகில் வரும் எல்லோருக்கும் நறுமணத்தையும், ஆரோக்கியத்தையும், அழகையும் கொடுத்துக்கொண்டிருப்பீர்கள்.

இக்காரணத்திற்காகத்தான் அந்த ஆனந்த நாட்டை அடையும் வகையை உங்களுக்குக் கற்றுக் கொடுக்க அவர் வருகிறார்.

பிரிவினை உணர்வு, வேறு யிருக்கிறேமெனும் உணர்ச்சி இராது. நாம் எல்லோரும் களித்திருக்க வேண்டும், இந்த ஊற்றை உருசி பார்க்கவேண்டும்

என்பது தான் முக்கியமானது. இப்படிப்பட்டதாகும் அந்தச் சாசுவதக் கருத்து. இப்படிப்பட்டதுதான் இராஜ்ஜியம்.

நாமெல்லோரும் உள்ளுக்குள் போதுமான அளவு சந்தோஷமாயில்லை என்று எனக்கு அடிக்கடி புலப்படு கிறது. நாம் வாழ்வில் அநேக வித விஷயச் சுமையை அவையாவன: நமது குடும்பங்கள், சிநேகிதர்கள், கவலைகள், சிறு சிறு எண்ணங்கள் இவைகளைச் சுமந்து கொண்டிருக்கின்றோம். ஆனந்த நாட்டிற்குள் போகும் கதவைத் திறந்து விட்டவுடனே இச்சிறு விஷயங்க ளெல்லாம் மறைந்து போகும். நல்லொழுக்கங்களைப் பற்றியாவது கவலைப்படமாட்டீர்கள்; பாபத்தைப்பற்றி யாவது விசாரப்படமாட்டீர்கள். ஏனெனில் ஜோதியின் நடுவிலிருப்பீர்கள். சுகத்தைக்கொண்டு வரவும், கொடுக் கவும், பேரின்ப மூலாதாரத்தில் நீங்கள் வீற்றிருப் பீர்கள்.

## ௬. கற்கவேண்டிய பாடங்கள்

காமியார்த்தமாய்ப் பேச விடையிருக்குமானல் நீங்கள் ஒவ்வொருவரும் இந்தக் கூடாரக் கூட்டு வாசத் திலிருந்து எவ்வளவு சேகரித்துக்கொண்டீர்கள்? வாஸ்த வத்தில் எவ்வளவு லாபமடைந்தீர்கள் என்பதைப் பற்றி யோசிக்கவும், சுற்றுமுற்றும் பார்த்துக் கவனிக் கவும் இப்போது நமக்கு அவகாசமிருக்கிறது.

என்மட்டிலோ, நான் மெத்த கற்றுக்கொண்டேன். உண்மைக் கருத்தின்படி கூடியமட்டில் நல்ல வகையில் நிஜமாகவே ஊக்கத்தோ டிருக்கக் கற்றுக்கொண்டேன்.

நீங்களும் காரியங்களைச் செய்ய ஊக்கத்தோடிருக்க வேண்டுமாகையால் அவைகளைச் செய்யத் தீவிரமான முயற்சியிலிருக்கவேண்டும். அந்த ஊக்க எழுச்சியின் கூடவே அதன் எதிர்மறைத் தன்மையாகிய அமைதியு மிருக்க வேண்டும். அந்த எழுச்சியைச் சாந்தப்படுத்திக் கொள்ள உங்களுக்குப் பழக்கம் வேண்டும்.

உண்மையில் நான் ஒன்றைக் கற்றுக்கொண்டேன். அதாவது மானிடன் எவன் பேரிலும் சார்ந்திருக்கப் படாதென்பதைக் கற்றேன். நான் சொல்வதை நீங்கள் தவறாகக் கொள்ளாதீர்கள். ஏனெனில் அதைப் பற்றி ஆச்சரியமானது ஒன்றுமில்லை. என்றாலும், நல்ல வகையில் நீங்கள் வைதீக நெறியுடன் மனோ நிலையை யும், உயர்தர தாப விருத்திகளையும் சீர்படவைத்திருக்க நீங்கள் எதிலும் பற்றற்றிருக்க வேண்டும். உண் டாக்கும் சாமர்த்தியம் இருக்க வேண்டுமானாலும், யோசிக்க வேண்டுமானாலும், இன்னும் தீவிர தாப உணர்வுடனிருக்க வேண்டுமானாலும் நீங்கள் தன்னலம் கருதாத் தன்மையோடிருக்க வேண்டும். அதாவது சொந்த காமியார்த்தமான குறுகிய பிரேமையைப் பாராட்டுதலி லிருந்தும், பந்தப்படுத்தும் எவ்வித விஷயப் பற்றிலிருந்தும் விலகிப்போய் தூரமாயிருக்க வேண்டும். அப்போது நீங்கள் மதிக்கக் கூடியவராய், விஷயங்களை அதனதன் தாராதரத்திற்குத் தக்கபடி நோக்க உங்களால் முடியும்.

உதாரணமாகக் காசியில் ஒரு நாள் ரயில்வே ஸ்டே ஷனில் நான் நின்றுகொண்டிருந்தபோது, தெளிந்த மனோநிலையைக் காட்டும் காஷாய உடைதரித்துக் கையில்

பேரின்பமெனும் கமண்டல மேந்திய ஒரு சந்நியாசி யைப் பார்த்துக்கொண்டிருந்தது நினைவிற்கு வருகிறது. அங்கு நாங்கள் சில ஜனங்களுடன் சூழ்ந்த வண்ணமா யிருந்தோம். சிறிது தூரத்தில் சந்நியாசி மிக்க கம்பீரத் துடன் கூடிய சாந்தமும், ஒருவகை வேண்டா வெறுப் பும் கூடின பார்வையுடன், கடின பார்வையல்ல, மற்று பூமாலைகளைப் போட்டுக் கொண்டு, அங்கிகளை உடுத்திக் கொண்டு, மூட்டை முடிச்சுகளுடன் இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்த்துக் கொண் டிருந்தார். அவரோ அரைத்துகிலுடன் கையில் தண்டு பிடித்து சந்தோஷ கரமாகக் காணப்பட்டார். களிப்புட னிருந்தார். அவர் உலகிலுள்ளதை நிஷ்காமிய நோக் கத்துடன், பற்றில்லாது மதிக்குந் திறமை பெற்றிருந் தார். அவருக்கு வேண்டியது உலகில் ஒன்றுமில்லை. ஏனெனில் ஒருவன் உலகைத் துறந்தபோது அவனுக்கு ஒருவித நிஜமான உள்ளத் திருப்தி உண்டாகிறது. தேகத்தால் வரும் திருப்தியல்ல. ஆதலால் இவர் சிறு விஷயங்களிலிருந்து முற்றிலும் பற்றில்லாது விடுபட்டி ருக்கமுடிந்தது. கிளர்ச்சியாலும்,முயற்சியாலும், வேலை யாலும் நிறைந்த இந்த நாட்களில் சந்நியாசி செய்த தைப் போலச் செய்யக் கற்றுக் கொண்டேன்.

பற்றற்றுப் பிரிந்திருக்கும் தன்மை ஏதோ ஒரு வகையில் கொஞ்சத்திற்குக் கொஞ்சமிருக்கு மானால் நீங்கள் வாழ்வைத் தீவிரமாகச் சுகிப்பீர்கள். அனுபவிக் கும் விஷயங்கள் யாவும் உடுப்பதும் கழற்றுவதுமான உடைகளைப் போன்றவை. இதை முதலில் கற்றுக் கொண்டேன்.

சம்பவ நிகழ்ச்சிகளுக்கு நீங்கள் எவ்விதம் இசைந்து கொடுத்தீர்கள் என்பதையும், உபாயமாகவோ அல்லது கெட்டியாகவோ வந்த அனுபவத்தின் அறிகுறி உங்களிடத்தி லிருப்பதையும் நீங்களாகவே கண்டு கொள்ள வேண்டுமென்று இவ்விஷயங்களை எல்லாம் உங்களுக்குச் சொல்கிறேன். இதை நீங்கள் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்வதற்காகவல்ல; மற்று நீங்கள் யோசிக்க வேண்டும் என்பதற்காகவே.

நீங்களடைந்த லாபத்தை, இங்கு நடந்த விஷயங்களால் உமக்கு வந்த பிரயோஜனத்தை நீங்களே யோசிக்க வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு சிறு விஷயத்தையும், சிறு காரியத்தையும், கிஞ்சித எண்ணத்தையும் சரியானவகையில் உபயோகப் படுத்தினால் அதில் மெத்த பலன் இருக்கிறது என்பது பின்னுக்கு யோசிக்கும் போது தெரியும். அப்போது நீங்கள் ஒவ்வொரு நாளும் மாறிக்கொண்டே வருவீர்கள்.

இந்த இரண்டு வாரங்களில் எனது உள்ளும் புறமும் எவ்வளவோ மாறிவிட்டன. எனது தேகம், முகம் எனது கைகள் எனதுநிலை முழுவதும் மாறிவிட்டன. இப்படி சதா கஷ்டப்பட்டுக் கொண்டு ஓய்வில்லா மாறுதல் அடைவதுதான் வாழ்வின் புனிதக் காற்றைச் சுவாசிக்கச் செய்யும் வழி.

இதுதான் மேதாவிக்கும் சிறியனுக்குமுள்ள வித்தியாசம். மேதாவியானவன் உள்ளுக்குள்ளே எப்போதும் கஷ்டத்தை யுண்டாக்கி ஆகாயமளாவுமளவு சுடரை எழ விடும்படியான எரிமலையை வைத்திருப்பவன். சிறியனோ சுடரை யுண்டாக்காமலும் நக்ஷத்திரம்

போன்ற பொறி பாணங்களை விடாமலும் மெதுவாய்ப் போய்க் கொண்டிருப்பவன்.

இவ்வித ஓய்வு இல்லாத மும்முரம் உங்களுக்கு இருக்குமானால் நீங்கள் ஆராய்ந்துகொண்டே யிருப்பீர்கள். பூமியிலுள்ள சிறு விஷயத்தினின்றும், பெரிய விஷயத்திலிருந்தும் கற்க எப்போதும் இசைந்திருப்பீர்கள். உயர்ந்த மரங்களிலிருக்கும் பெரு விஷயங்களை மாத்திரம் எதிர்பார்க்க நாம் அநேகமாய் வழக்கப்பட்டிருக்கிறோம். நான் கற்றதில் இஃது இரண்டாவது.

நான் மூன்றாவதாகக் கற்றது அன்பைப் பற்றியது. மானிட கனிகரம், மானிட சிநேகிதம் என்று கூறப்பட்ட அன்பானது பிராணாதாரமானது. ஆகவே, மனுஷ்ய அன்பு உங்களிடத்தி லிருக்கவேண்டும். ஆனால் இதற்கு மேல் இன்னொருபடி இருக்கிறது. அப்போது, மானிட அன்பின் வாயிற்படியைத் தாண்டி தெய்விகக் கருணையின் இராஜ்ஜியத்திற்குப் போவது.

அப்போது உங்களுக்குப் பிரியமானவர்களும், இன்னும் உங்கள்மேல் ஆசை கொள்பவர்களும் ஆயிரக்கணக்கான பேர் உங்களைச் சூழ்ந்திருந்த போதிலும் அந்த அன்பை உணர முடியும். உம்மோடு ஒரு மாதிரியாயிருப்ப வரும் அல்லது உம்மை வெறுக்கும் ஜனங்களும் அநேக ஆயிரக்கணக்காய் உம்மைச் சூழ்ந்திருந்த போதிலும் அஃது உம்மைத் தட்டாது.

உபாயமான அலைச்சல்கள் இருக்கக்கூடும். ஏரியில் ஓடுங்காற்றால் அலைகளுண்டாகலாம்; ஆனால் ஆழத்திலோ நிலையான சாந்தமிருப்பதைக் காண்பீர்கள்.

அந்த அன்பின் எல்லைக்குள் நுழைந்தபோது நீங்கள் வேறு விதமாயிருப்பீர்கள். அதைத்தான் நாம்

எல்லோரும் விரும்புவது. நாமெல்லோரும் பிரேமையை ஆவல் கொள்கிறோம். மற்றவருக்குக் கொஞ்சம் பிரேமையைக் காட்டினோமானால் அவர்களுடைய முகத்தில் நிஜமான களிப்பை உடனே பார்க்கலாம். ஆனால் அன்பு சகிதமாயிருக்கும் தெய்வ அருள் இராஜ்ஜியத்திற்குப் போக இஃது ஒரு படியாகத்தான் இருக்கிறது. அந்த நிலைக்கு வந்தபோது உம்மை எவரும் இச்சித்தாலும் ஒன்றே, இச்சியாவிட்டாலும் ஒன்றே ; உமக்கு ஒருவர் அன்பு பாராட்டினாலும் ஒன்றே மற்றவருக்குப் பாராட்டினாலும் ஒன்றே. ஏனெனில் நீங்கள் அன்பின் சத்தாக இருக்கிறீர்கள்.

பெருத்த அலங்காரமான பர்வதம் ஒன்று அதன் பெருமையைக் கேட்கப் பிரியப்பட்டாலும் சரி, ஜனங்களுடைய நன் மதிப்பை விரும்பினாலும் சரி, அஃது எப்போதும் பெரிதே என்று நான் அடிக்கடி எண்ணுவதுண்டு. அதிசயித்தாலும் இல்லா விட்டாலும் அஃது எப்போதும் அழகுள்ளதே. அப்படித்தான் நமக்கு மிருக்க வேண்டும். நாம் தனியாய் விட்டோம், மன வாட்டம் வருகிறது என்பவைகளி னின்று நாம் தப்பித்துக் கொள்ள வேண்டும்.

நான்காவதாக நான் கற்றது யாதெனில் : கவனித்துப் பார்த்தல், இசைந்து தருதல். கவனித்துப் பார்ப்பதால் நாம் கற்கின்றோம் ; இன்னும் இணங்கிக் கொடுக்கும் தன்மை வருகிறது.

இன்னும் ஒன்று கற்றதைச் சேர்க்க எனக்குப் பிரியம். இந்தக் கூட்ட வாசத்திலிருக்கும் நாம் இயற்கை அமைவுடன் நெருங்கி வசித்தோம். வானத்திற்கும்,

நட்சத்திரங்களுக்கும் இன்னும் உலகிலுள்ள பெரும் விஷயங்களுக்கும் அருகில் வசித்தோம். ஆகவே திரும்பவும் சிறு விஷயங்களைச் செய்யப் போகாதீர்கள். உங்களைத் தாழ்த்திக்கொள்ளாதீர்கள்; தடுத்துக்கொள்ள எச்சரிக்கையா யிருங்கள். உண்மையில் பெரிய விஷயங்களைச் செய்வது சிறியவைகளைவிடச் சுலபந்தான். நீங்கள் கீழே விழவேண்டுமானால் முப்பத்து மூன்றுவது கட்டிலிருந்துவிழுங்கள். தரையில்தடுமாறி விழாதீர்கள்.

நித்தியமான இந்தப் பேரின்பக் காட்சியைக்கொண்டு நீங்கள் உண்மைச் சுகத்தை வாழ்வில் காண்பீர்கள். இதை உறுதியாகச் சொல்வேன். எனக்கோ வாழ்வு இப்போது முன்னைவிட மெத்த அலங்காரமா யிருக்கிறது. ஏனெனில் எனக்குள் இந்தப் பேரின்பத்தை இடையறாது வைத்திருக்கிறேன். நான் சாத்தியிருக்கும் உங்கள் கதவுகளைத் தட்டிக்கொண்டிருக்கிறேன். ஏன்? திறக்கும்படி செய்யத் தட்டுகிறேன்.

உங்களிடத்தில் அந்தப் பேரின்பம் இருக்குமானால் வாழ்வில் வேறு யாதும் உங்களுக்குத் தேவையில்லை. நீங்கள் தடையில்லாது சுய சுதந்திரம் பெற்றவராவீர்கள். சாதாரண இன்பம் கொடுக்கும் சிக்கல்களில்லாது நீங்கள் சுகமா யிருப்பீர்கள். உங்களிடத்தில் எல்லாவித இன்பத்திற்கும் உற்பத்திஸ்தான மிருக்கிறது.

58875

---

3-வது உரிமையில் வாழ்வு
வெளிவந்த பின்னர்
இந்நூல் முற்றுப்பெறும்.

R 81
N33.2

திரு. மு. மாணிக்கம் பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்ட

# இதர நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1. குருவுபதேசம். At the Feet of the Master | 0 | 1 |
| 2. சாதன : சதுட்டயம் ஸ்ரீமான் லெட்பீடர், டாக்டர் அன்னிபெஸண்ட் அம்மையார் இருவரும் "குருவுபதேச" மொழிகளுக்குக் கொடுத்த விரிவான வியாக்கியானம் கி : பக்கம் 500 | 3 | 0 |
| 3. உண்மை விளக்குபவர் யார்? Who Brings the Truth | 0 | 1 |
| 4. இப்போதே "Now" | 0 | 1 |
| 5. திவ்யஞான தீபம் : கலியுக ஐயாயிர வருடங்களில் குப்தமாக சிஷியர்களுடைய பரிபக்குவமறிந்து கொடுத்து வந்த உண்மைகள், இதுபோது தியாசொபி எனும் பெயரால் ஆங்கிலத்தில் வெளியான உண்மைகளின் திரட்டு கி. பக்கம் 340. | 3 | 0 |

தி. மா. சோமசுந்தரம் பிள்ளை, F. T. S.,

612, கங்காணி தெரு,

திருப்பத்தூர், N. A.